மாநகர சபை, யாழ்ப்பாணம்.

விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை 28 சனிக்கிழமை (10.05.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 143




## மன்னாரில் நேற்று உக்கிர சமர்

(மன்னார்)

மன்னார் கட்டுக்கரைக்குளத்துக்கு வடக்கே உள்ள ஆலங்குளம் பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற உக்கிர சமர்களில் குறைந்தது 33 விடுதலைப்புலிகளும் 3 இராணுவத்தினரும் கொல்லப்பட்டிருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த மோதல்களில் 5 படையினர் காணாமல் போயிருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சுக் கூறியிருக்கின்றது. நேற்றுக் காலை 6 மணியளவில் விடுதலைப்புலிகளின் பலம் பொருந்திய முன்னரங்குப் பகுதிகளை உடைத்துக் கொண்டு முன்னேறுவதற்காக இராணுவத்தினர் பல முனைகளில் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின்போது இரு தரப்பினருக்கும் மோதல்கள் மூண்டதாகப் பாதுகாப்பு அமைச்சகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

படையினருக்கு உதவியாக எம்.ஐ.-24 ரகத் தாக்குதல் உலங்கு வானூர்தியும் தாக்குதல் விமானங்களும் விடுதலைப்புலிகளின் இலக்குகள் மீது தாக்குதல் நடத்தி அவர்களுக்குச் சேதங்களை ஏற்படுத்தியதாகக் கடற்படை அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

இதேவேளை மன்னார் கறுக்காய்க்குளம் பகுதியில் நேற்று இராணுவத்தினருடன் கடும் மோதல்கள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ள விடுதலைப் புலிகள், இராணுவத் தரப்பில் 30ற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டதாகவும் 5 இராணுவத்தினரின் சடலங்களையும் இராணுவ தளபாடங்களையும் தாங்கள் கைப்பற்றியிருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

### அடம்பன் மீட்பு

மன்னார் மாவட்டம் அடம்பன் நகரப் பகுதியை நேற்றுக் காலை 9 மணியளவில் இராணுவத்தினர் கைப்பற்றியதாகத் தேசிய பாதுகாப்புக்கான ஊடகத் (10 ஆம் பக்கம் பார்க்க)

# அம்பாறையில் குண்டுவெடிப்பு

# 13 பேர் பலி; 29 பேர் படுகாயம்

## தனியார் உணவகத்தினுள் சம்பவம்

(அம்பாறை)

அம்பாறை நகரில் நேற்று மாலை 5.45 மணியளவில் இடம் பெற்ற பாரிய குண்டுவெடிப்பில் 13 பேர் உயிரிழந்துள்ளதுடன் 29 பேர் காயமடைந்துள்ளனர். அம்பாறை பிரதான பஸ் தரிப்பு நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள சிட்டி கபே என்கிற தனியார் உணவு விடுதிக்குள்ளேயே இந்தக் குண்டு வெடிப்பு இடம் பெற்றுள்ளது. (10 ஆம் பக்கம் பார்க்க)

## பூங்கனிச் சோலை உரிமையாளர் நேற்று இரவு சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

பூங்கனிச்சோலையின் உரிமையாளர் நேற்றிரவு 7 மணியளவில் இனந்தெரியாத ஆயுததாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இராமலிங்கம் வீதி, முடமாவடியைச் சேர்ந்த சின்னத்துரை பத்தகுணசீலன் (வயது-47) என்ற 5 பிள்ளைகளின் தந்தையே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். அவரது வீட்டுக்கு முன்பாக இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவரை வெளியே அழைத்து சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக கோப்பாய்ப் பொலிஸ் நிலையத்தில் உறவினர்களால் நேற்றிரவு முறையிடப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பான மரண விசாரணை, பிரேத பரிசோதனை என்பன இன்று இடம்பெறவுள்ளதாகப் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. (ஏ)

## இலங்கைக்கு கருணா நாடு கடத்தல்?

(லண்டன்)

பிரித்தானியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கருணா இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டு விட்டதாக நேற்று முன்தினம் இரவு செய்திகள் பரவியுள்ளன.

இருப்பினும் தலைநகர் கொழும்பில் உள்ள பிரித்தானிய தூதரகம், வியாழக்கிழமை காலை வரை பிரித்தானியாவில் தடுப்புக் காவலில் கருணா வைக்கப்பட்டிருந்ததாக பிரித்தானியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர் என்று அறிவித்துள்ளது.

2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இராஜதந்திரிகளுக்கான போலிக் கடவுச்சீட்டில் பிரித்தானியாவுக் (10 ஆம் பக்கம் பார்க்க)

## வரலாறு காணாத பாதுகாப்புடன் இன்று கிழக்கு மாகாணத் தேர்தல்

(திருகோணமலை)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மூன்று மாவட்டங்களிலும் வரலாறு காணாத பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

28 ஆயிரம் பொலிஸாரும் 35 ஆயிரம் இராணுவத்தினரும் கிழக்கில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். விசேட பாதுகாப்புக் கடமைக்காக 7 ஆயிரத்து 500 பொலிஸார் கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத் தேர்தல் பாதுகாப்புக் குறித்துத் தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மாஅதிபர் காமினி நவரத்தின கூறியதாவது,

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் எவ்வித வன்முறைச் சம்பவங்களும் இடம்பெறாதிருக்கும் வகையில் அம் மாகாணத்தின் பாதுகாப்பு, பொலிஸாரின் ஒத்துழைப்புடன் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்காக சுமார் 28 ஆயிரம் பொலிஸார் நியமிக்கப்பட்டுள்ளனர். கிழக்கு மாகாண சபைக்கு உரித்தான மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மற்றும் கந்தளாய் போன்ற பொலிஸ் பிரிவுகளில் அமைந்துள்ள அனைத்துப் (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகங்களுக்கு இராணுவத்தினர் தகவல்கள் தெரிவிக்கக் கூடாது

### சுற்றறிக்கை மூலம் அறிவித்தல்

(கொழும்பு)

படை நடவடிக்கை தொடர்பான எந்தத் தகவல்களையும் ஊடகங்களுக்கு தெரிவிக்க வேண்டாம் என்ற புதிய கட்டுப்பாடுகள் அடங்கிய சுற்றறிக்கை ஒன்று களமுனைகளில் உள்ள படை அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இராணுவத்தின் இந்தக் கட்டுப்பாடுகளை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற இந்த சிறப்பு அறிவித்தலை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா, பிராந்திய தளபதிகளின் ஊடாக அனுப்பியுள்ளார்.

இந்த வாரத்தின் ஆரம்பத்தில் விநியோகிக்கப்பட்டுள்ள இந்த (10 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் ஆணையாளரின் உத்தரவுகள் கிழக்கில் அமுல்படுத்தப்படவில்லை

### ஐக்கிய தேசியக் கட்சி கடும் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கிழக்கில் சட்டவிரோதமான ஆயுதக் குழுக்களை நிராயுதபாணிகளாக்கி முகாம்களை அகற்றுமாறு தேர்தல் ஆணையாளர் பாதுகாப்புத் தரப்பினருக்கு உத்தரவிட்டிருந்தார். ஆனால் முகாம்கள் அகற்றப்படவோ ஆயுதக் குழுக்கள் நிராயுதபாணிகளாக்கப்படவோ இல்லை.

மாறாக புதிய முகாம்களே அமைக்கப்பட்டுள்ளன. தேர்தல் ஆணையாளரின் உத்தரவு அமுல்படுத்தப்படவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார். இத் தேர்தலை ஊழல், மோசடிகள் மூலம் வெற்றிபெறுவதைத் தவிர அரசுக்கு வேறு வழியில்லை எனவும் அவர் கூறினார். (ச-5)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## இ.சபாலிங்கம் வெற்றிக்கிண்ண

# ஒருநாள் துடுப்பாட்டப் போட்டி யாழ்.இந்து மைதானத்தில் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக் கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் இடையிலான மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்களைக் கொண்ட இ.சபாலிங்கம் வெற்றிக் கிண்ணத்துக்கான ஒருநாள் துடுப்பாட்டப்போட்டி இன்று யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறுகிறது.

இப்போட்டிக்கு யாழ்.இந்துக் கல்லூரி அணிக்கு தி.கௌசிகனும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கு இ.வாகீஸூம் தலைமை தாங்குகின்றனர்.


இரு கல்லூரிகளுக்கிடையே இவ்வருடம் முதல் ஆரம்பிக்கப்படும் இ.சபாலிங்கம் வெற்றிக் கிண்ணத்துக்கான மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்களைக் கொண்ட துடுப்பாட்டப் போட்டி பெரும் விறுவிறுப்பாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த மார்ச் மாத இறுதியில் நடைபெற்ற இரு கல்லூரிகளுக்குமிடையிலான ‘இந்துக் கல்லூரிகளுக்கிடையிலான துடுப்பாட்டபோர்’ என வர்ணிக்கப்படும் இரு தினங்களைக் கொண்ட இன்னிங்ஸ் துடுப்பாட்டப் போட்டி சமனிலையில் முடிபடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலக திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன் கலந்து சிறப்பிக்கின்றார்.

இன்று காலை 8.30 மணிக்கு பிரதம விருந்தினர், கல்லூரி அதிபர்கள் மற்றும் இரு அணி வீரர்களும் மேலத்தேய இசை வாத்தியங்களுடன் மைதானத்திற்கு அழைத்து வரப்பட்டு, காலை 9 மணிக்கு ஆட்டம் ஆரம்பமாகும்.(5)


### யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி



இருப்பவர்:- இடமிருந்து வலம் - பா.ஜெயரட்ணராஜா (அணிப்பொறுப்பாசிரியர்), பொ.மகேஸ்வரன் (பிரதி அதிபர்), வ.அஜித் (உபதலைவர்), வீ.கணேசராசா (அதிபர்), தி.கௌசிகன் (தலைவர்), பொ.சிறீஸ்கந்தராஜா (உப அதிபர்), ச.நிமலன் (விளையாட்டுத் துறைப் பொறுப்பாசிரியர்), ந.சிவராஜ் (பயிற்றுவிப்பாளர்).

நிற்பவர்:- இடமிருந்து வலம் - ந.சுதாகரன், இ.பவசுதன், க.சுரேஷ்குமார், சி.நிரஞ்சனன், சி.உமாதரன், எஸ்.சிந்துஜன், கு.நிருஜன், ப.சஞ்சீவன், சோ.யாதவன், அ.பிரியதர்சன், சு.பிரசன்னா.

### கொக்குவில் இந்துக் கல்லூரி



இருப்பவர்:- இடமிருந்து வலம் - எஸ்.ஆர்.உமாசுதன் (விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்), இ.வாகீஸ் (அணித்தலைவர்), ஏ.அகிலதாஸ் (அதிபர்), எஸ்.வல்லவக்குமரன் (உப தலைவர்), எஸ்.கோகுலன் (பயிற்றுவிப்பாளர்), ஆர்.ஜெகதீஸ்வரன் (அணிப் பொறுப்பாசிரியர்).

நிற்பவர்:- இடமிருந்து வலம் - தி.துவாகரன், வி.ஜனார்த்தனன், பி.ரெனிசன், தி.லக்ஷன், எஸ்.ஜனுகுலன், ஆர்.நிரூஜன், பி.நிதர்சன், கே.நிரோஜன், ஆர்.ஏரகன், சி.கோபிகன், எஸ்.மயூரன், கே.ஜனுதாஸ், எஸ்.உத்தமகுமரன், எஸ்.நிரோஜன்.

இ.சபாலிங்கம் வெற்றிக்கிண்ண ஒருநாள் துடுப்பாட்டப்போட்டி சிறப்புற நடைபெற வாழ்த்துகின்றோம்.

யாழ்.மண்ணில் மிகக் குறைந்த விலைகளில் கணனிகள் மற்றும் கணனி உதிரிப்பாகங்களை பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்

PC PARK (PVT) LTD.

#633, KKS ROAD, JAFFNA. TP : 021 222 9581
POINTPEDRO ROAD, NELLIYADY, KARAVEDDY. TP : 021 226 4828
WWW.PCPARK.LK INFO@PCPARK.LK

the path to computer paradigm

# கங்குலி அணி திரில் வெற்றி

(கொல்கத்தா)

இறுதிப்பந்து வரை விறுவிறுப்பாக நடைபெற்ற பெங்களூர் றோயல்ஸ் சலஞ்சர்ஸ் அணியுடனான போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 5 ஓட்டங்களால் திரில் வெற்றி பெற்றது.

இவ் வெற்றியின் மூலம் கங்குலி தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 4 தொடர்ச்சியான தோல்விகளுக்கு பின்னர் வெற்றி பெற்றுள்ளது. இந்தியன் பிரிமியர் லீக் அமைப்பின் முதலாவது இருபது -20 தொடர் நடைபெற்று வருகிறது.

இத் தொடரில் கொல்கத்தாவில் நேற்று முன்தினமிரவு கங்குலி தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் டிராவிட் தலைமையிலான பெங்களூர் றோயல்ஸ் சலஞ்சர்ஸ் அணியும் மோதின.

இப்போட்டி ஆரம்பமாவதற்கு முன்பாக மழை குறுக்கிட்டதால் ஆட்டம் சில மணி நேரம் தாமதமாகி மழை விட்ட பின்னரே ஆரம்பமானது.

இதனால் போட்டி இரு அணிகளுக்கும் தலா 16 ஓவர்கள் வழங்கப்பட்டு நடைபெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 16 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 129 ஓட்டங்களை எடுத்தது.

இதில் டேவிட் ஹசி 12 பந்துகளில் (ஒரு பவுண்டரி 3 சிக்ஸர் உட்பட) 26 ஓட்டங்களையும் கங்குலி 20 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் சகா 17, முரளிகார்த்திக் 17 ஓட்டங்களையுமெடுத்தனர். பந்து வீச்சில் ஸ்ரையன் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 16 ஓவர்களால் 124 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி, கங்குலியின் மாஜாயால பந்து வீச்சால் இறுதிப் பந்துவரை போராடி 16 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களையிழந்து 124 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 5 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இதில் மார்க் பௌச்சர் ஆட்டமிழக்காமல் 40 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 50 ஓட்டங்களையும் வைற் 16 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 30 ஓட்டங்களையும் மற்றும் அருண்குமார் 22 ஓட்டங்களையுமெடுத்தனர்.

பந்துவீச்சில் அணித்தலைவர் கங்குலி 3 ஓவர்கள் பந்துவீசி 7 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். அவர் வீழ்த்திய விக்கெட் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணித்தலைவர் டிராவிட்டின் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால் சிறந்த பந்து வீச்சுக்கான ஆட்ட நாயகன் விருதையும் கங்குலியே பெற்றார். இவ்வெற்றியின் மூலம் கங்குலி தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி தான் ஆடிய 7 ஆவது போட்டியில் பெறும் 3 ஆவது வெற்றியாகும். இறுதியாக நடைபெற்ற 4 ஆட்டங்களில் தொடர்ச்சியாக தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இத்தோல்வியில் டிராவிட் தலைமையிலான பெங்களூர் றோயல்ஸ் சலஞ்சர்ஸ்அணி தான்விளையாடிய 7 வது போட்டியில் சந்திக்கும் 5 ஆவது தோல்வியாகும்.(5)

## ஐ.சி.சி குழுத் தலைவர் பதவியை இராஜினாமாச் செய்தார் கவாஸ்கர்

சர்வதேச கிரிக்கெட் குழுவின் ஐ.சி.சி இந்திய குழுத்தலைவராக முன்னாள் அணித் தலைவர் சுனில் கவாஸ்கர் கடந்த 2000 ஆம் ஆண்டு முதல் வகித்து வந்தார். அவரது பதவிக் காலம் அடுத்த ஆண்டு இறுதி வரை இருந்தது.

அந்தப் பொறுப்பில் இருந்து கொண்டே கவாஸ்கர் பத்திரிகைகளில் கட்டுரையாளராகவும் வர்ணனையாளராகவும் செயல்பட்டார். சிட்னியில் இந்திய-அவுஸ்திரேலியா இடையியே நடந்த டெஸ்டில் எழுந்த சர்ச்சையின் போது நடுவரை கவாஸ்கர் விமர்சித்தார்.

ஐ.சி.சி யில் முக்கிய பொறுப்பில் இருந்து கொண்டு இவ்வாறு விமர்சித்ததால் கவாஸ்கருக்கு கடும் எதிர்ப்புக் கிளம்பியது.

இரண்டு பொறுப்புக்களில் ஏதாவது ஒன்றை மட்டும் கவாஸ்கர் விலக்கவேண்டும் என்று ஐ.சி.சி கேட்டுக் கொண்டது.

இந்நிலையில் ஐ.சி.சி குழுத் தலைவர் பொறுப்பை கவாஸ்கர் நேற்று முன்தினம் இராஜினாமாச்செய்தார். கவாஸ்கருக்குப் பதிலாக யாரை நியமிப்பது என்பது குறித்து இன்னும் முடிபு செய்யப்படவில்லை.

(5)

## இன்று ஒரு தகவல்

### வாதத் திறமை

தப்பு செய்த ஒருவன் பொலிஸில் மாட்டிக்கொண்டான். அவனிடம் விசாரணை நடந்தது. அவன் தான் குற்றவாளி என்பது நிரூபிக்கப்பட்டது. அதற்கான ஆதாரங்களும், சாட்சிகளும் நிறையக்கிடைத்தன.

நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடந்து கொண்டிருந்தது. அவன் சார்பில் வக்கீல் வாதாடினார்.

அவனை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்று நினைத்தார். மிகவும் சாமர்த்தியமாக செயல்பட்டார். எனது கட்சிக்காரர் குற்றவாளி அல்ல என்று மிகவும் ஆணித் தரமாகக் கூறினார்.

இருந்தாலும், பொலிஸ் தரப்பில் குற்றவாளிக்கு எதிரான ஆதாரங்களும், சாட்சிகளும் மிகவும் வலுவாக இருந்தது.

அதனால் அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. கடைசியாக அவனைக் காப்பாற்ற ஒரேயொரு வழிதான் இருந்தது.

வக்கீல் நீதிபதியைப் பார்த்து, "கனம் ! கோட்டார் அவர்களே! குற்றம்செய்த்து எதுவாக இருந்தாலும் சரி அல்லது எவராக இருந்தாலும் சரி சட்டப்படி தண்டிக்கப்படவேண்டுமல்லவா!" என்றார். உடனே, அந்த நீதிபதியும் "ஆமாம் உண்மைக் குற்றவாளிகள் தான், தண்டிக்கப்படவேண்டும்" என்றார்.

இவ்வாறு நீதிபதி சொன்னதும், "அப்படியானால் இந்தக் குற்றத்தைச் செய்தது எனது கட்சிக்காரர் இல்லை. அவருடைய கைதான்" என்றார் வக்கீல்.

இதைக்கேட்ட நீதிபதி யோசித்தார். "அது எப்படி? கையை மட்டும் தண்டிக்கமுடியும்? கையைத் தண்டித்தால், அந்தக் கைக்கு உரியவரையும் சேர்த்துத் தானே தண்டிக்கமுடியும்" என்று நினைத்தார். இருந்தாலும் வக்கீலின் சாமர்த்தியத்தை சோதிக்க எண்ணினார்.

"உண்மைதான்! உண்மையிலேயே அந்தக்கை தான் குற்றத்தைச் செய்தது என்றால், குறிப்பிட்ட அந்தக்கையைத்தான் தண்டிக்க வேண்டும்.

அதனால் கையை உடம்பிலிருந்து தனியாக எடுத்து தண்டனை கொடுக்கலாம்" என்றார். உடனே வக்கீல், நேராக தனது கட்சிக்காரரிடம் போனார்.

அவருடைய கையைத் தனியாக எடுத்துவந்து நீதி பதி யிடம் கொடுத்து, "இந்தக் கைக்கு என்ன தண்டனை கொடுக்கவேண்டுமென்று நினைக்கிறீர்களோ அதை நீங்கள் கொடுக்கலாம்" என்றார் மிகவும் சாமர்த்தியமாக.

அப்பொழுது தான் என்ன விஷயம் என்று எல்லோருக்கும் விளங்கிற்று. அதாவது, அந்த ஆளுக்கு ஏற்கனவே ஒருகை கிடையாது. அவர் வைத்திருந்தது செயற்கைக்கை என்பது.

இதுதான் வாதத்திறமை.

ஆனால் குற்றவாளிகள் எவரும் தண்டனையிலிருந்து தப்பிக்கமுடியாது. சில சமயம் குற்றவாளிகளிடமும் வாதத் திறமையைக் காணலாம்.

ஒரு கிராமத்தில் 100 ரூபாய் திருட்டுப் போன தற்காக பஞ்சாயத்து நடந்தது. ஒருவன் மேல் சந்தேகம் வந்தது. கூப்பிட்டு விசாரித்துவிட்டு "உன் மேல் எந்த தப்பும் இல்லை நீ போகலாம்" என்றார் பஞ்சாயத்துத் தலைவர்.


சரி என்று போனவன், திரும்பிவந்து, அப்படியானால் அந்த நூறுரூபாயை நானே வைத்திருக்கலாமா சார் என்றான் வெகுளித்தனமாக.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

## 'எரியும் நினைவுகள்' - யாழ்.நூலக எரிப்பு ஆவணப்படம் - குறுவட்டு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசாங்கத்தால்




1981ஆம் ஆண்டில் எரியூட்டப்பட்ட யாழ்ப்பாண நூலகம் பற்றி "எரியும் நினைவுகள்" என்ற ஆவணப் படம் உருவாக்கப் பட்டுள்ளது. குறு வட்டில் (DVD) தயாரிக்கப்பட்ட இந்த ஆவணப்படம் 50 நிமிடங்கள் ஓடக்கூடியது.

யாழ்.நூலகம் எரியூட்டப்பட்ட 27 ஆவது ஆண்டு தினமான எதிர் வரும் 31ஆம் திகதி அன்று உலகம் எங்கும் இந்த ஆவணப்படம் வெளியிடப்படவுள்ளது.

ஈழத்தமிழர்களின் பெரும் சொத்தாகவும், கல்விப்புலமையின் குறியீடாகவும் விளங்கிய யாழ்.நூலகத்தின் வரலாறு ஈழத்தமிழர்களின் அரசியல் மற்றும் வாழ்வியலுடன் பின்னிப்பிணைந்தது.

1933ஆம் ஆண்டில் இருந்து இன்று வரையான காலத்தில் அந்த நூலகத்தின் வலிமிகுந்த வரலாறு இந்த ஆவணப்படத்தில் இடம்பெற்றுள்ளது. இதனை சோமீதரன் உருவாக்கியுள்ளார்.

சிதைவுற்ற யாழ்.நூலகத்தின் காட்சிகள், அங்கு பணியாற்றியோரின் வாக்குமூலகங்கள், பத்திரிகை நறுக்குகள், உரைகள், கறுப்பு வெள்ளையிலான காணொளி நேர்காணல்கள், வரைபடங்கள், எடுத்துரைப்புக்கள் ஆகியவற்றுடன், "எரியும் நினைவுகள்" தொகுக்கப்பட்டுள்ளது.

தமிழ், ஆங்கிலம், பிரெஞ்ச் மற்றும் ஜேர்மன் மொழிகளில் எடுத்துரைக்கும் வகையில் இந்த ஆவணம் தயாரிக்கப்பட்டிருக்கின்றது. "நிகரி" தயாரிப்புக் குழுவினர் 2006ஆம் ஆண்டில் இருந்து இதனை உருவாக்கும் பணியில் ஈடுபட்டனர்.

எண்பதுகளில் வாழ்ந்த உணர்ந்த ஒரு தலைமுறையில் எரியும் நினைவுகளை அடுத்த தலைமுறைக்கும் எடுத்துச்செல்ல இந்த ஆவணப் பம் உருவாக்கப்பட்டுள்ளது. (அ-5)

## புதிய கம்பனிச் சட்டத்தின் கீழ் மீளப்பதிவு நடவடிக்கைகள்

புதிதாக நடைமுறைக்கு வரவிருக்கும் கம்பனிச் சட்டத்தின் கீழ் இதுவரை 20,337 கம்பனிகள் மீளப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

புதிதாக நடைமுறைக்குவரவுள்ள 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மே மாதம் 2ஆம் திகதிக்கு முன்பு மீளப்பதிவு செய்துகொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டதாக கம்பனிகள் பதிவாளர் நாயகம் டீ.கே.ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இதற்கான காலக்கெடு முடிந்துவிட்டபோதிலும் கம்பனிகளிடமிருந்து தற்போதும் விண்ணபப்படிவங்கள் கிடைத்தவண்ணமிருக்கின்றன. இலங்கையில் சுமார் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கம்பனிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் தற்போது இயங்காத கம்பனிகளும் உள்ளடங்குகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 235 விலை கூறப்பட்ட கம்பனிகள் இருப்பதாகவும் கிட்டத்தட்ட 50 ஆயிரம் தனியார் கம்பனிகள் இருப்பதாகவும் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் தரவுகள் குறிப்பிடுகின்றன.

முன்னர் நடைமுறையிலிருந்த 1982ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்டத்தின் கீழ் தனியார் கம்பனி ஒன்றை ஆரம்பிப்பதற்கு ஆகக் குறைந்தது இரண்டு பேரும், பொதுக் கம்பனி ஒன்றினை ஆரம்பிப்பதற்கு 7 பேரும்தேவையாகும். ஆனால் 2007ஆம் ஆண்டின் புதிய சட்டத்தின் மூலம் ஒருவரே பதிவினை மேற்கொள்ள முடியும் எனவும் பதிவாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், எதிர்காலத்தில் புதிய கம்பனி ஒன்று ஆரம்பிக்கப்படுமிடத்து, பொது மக்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு மும்மொழிப் பத்திரிகைகளிலும் அது தொடர் பான அறிவித்தல் பிரசுரிக்கப்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரு வருடத்துக்கு முன்னர் கம்பனிகளை மீளப்பதிவு செய்யுமாறு அறிவித்த போதிலும் எல்லாக் கம்பனிகளும் கடைசி நேரத்திலேயே பதிவிற்காக வந்திருப்பதாகவும், அதன் காரணமாக பதிவாளர் திணைக்களத்தில் பெரும் கூட்டம் கூடியிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-5)

## இராசிபலன்

10.05.2008
(சித்திரை 28, சனிக்கிழமை)
பஞ்சமி காலை 06.50 மணிவரை
புனர் பூசம் முன்னிரவு 07.52மணிவரை
ஷஷ்டி பின்னிரவு 5.01மணிவரை
இராகுகாலம் 08.54-10.24 மணிவரை
சுபநேரம் 02.54-04.24 மணிவரை
ஷஷ்டி விரதம்

| | |
|---|---|
| மேடம் | மனச்சஞ்சலம், கல்வியில் ஆர்வம், ரோகபயம், முயற்சி தாமதம். |
| இடபம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், பொருள்சேர்க்கை, சகோதரர் உதவி. |
| மிதுனம் | விவாதம், கடினமுயற்சி, தனவிரயம். உடல் நலக்குறைவு. |
| கடகம் | தேகநலன், சயனசுகம், நல்ல முயற்சி. ஜனவசியம். |
| சிங்கம் | பிதாசிந்தை, கோபப்படுதல், காரிய அலைச்சல், சுபசெலவு. |
| கன்னி | மனமகிழ்ச்சி, நல்லவருமானம், நண்பர்கள் சந்திப்பு. |
| துலாம் | சுபநிகழ்வு, கடின உழைப்பு, தூரதேசச்செய்தி, போசனசுகம். |
| விருச்சிகம் | ஆன்றோர் சந்திப்பு, புதிய திட்டமிடல், அச்சமான நிலை. |
| தனுசு | வீண்தொல்லை, காரியதடங்கல், பணவிரயம், வாகனபயம். |
| மகரம் | திடீர்பயணம், அபூர்வசந்திப்பு, செய்தொழில் விருத்தி, புதியதிருப்பம். |
| கும்பம் | பணவருவாய், சத்துருஜெயம், உடல்நலம், முயற்சிகைகூடும். |
| மீனம் | வியாபார நன்மை, காரிய இடையூறு, மனச்சஞ்சலம், அதிகசெலவு. |

வளவன்

## ஐம்பதாயிரம் தொன் அரிசி தாய்லாந்திலிருந்து இறக்குமதி

தாய்லாந்திடமிருந்து இலங்கை 50ஆயிரம் தொன் அரிசியினை இயக்குமதி செய்யவுள்ளதாக தாய்லாந்தின் வர்த்தக அமைச்சரை மேற்கோள்காட்டி றொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

உலகின் மிகப் பெரிய அரிசி ஏற்றுமதி நாடான தாய்லாந்திடமிருந்து இலங்கை மற்றும் கிழக்குத் தீமோர் ஆகிய நாடுகளுக்கு 95ஆயிரம் தொன் அரிசியினை ஏற்றுமதி செய்வது குறித்த பேச்சவார்த்தையில் ஈடுபட்டிருப்பதாக தாய்லாந்தின் வர்த்தக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அதிகாரிகள் கடந்த வாரம் பாங்கொக் நகரில் தம்மைச் சந்தித்து 50 ஆயிரம் தொன் அரிசி தேவைப்படுவதாகக் கூறினர் என தாய்லாந்தின் வர்த்தக அமைச்சின் வெளிநாட்டு வர்த்தகத் திணைக்கள அதிகாரியான அபிராடி தன்ரபோன் தெரிவித்தார்.

கடந்த வருடம் தாய் லாந்திடமிருந்து இலங்கை 3499 தொன் அரிசியினையும். கிழக்குத் தீமோர் 17234 தொன் அரிசியினை யும் கொள்வனவு செய்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தாய்லாந்தில் மே மற்றும் ஜுன் மாதங்களில் மாத்திரம்4.2 மில்லியன் தொன் அரிசி உற்பத்தி செய்யப்படும் எனவும் இதன் காரணமாக குறைந்த விலையில் அரிசியை விற்க முடியும் என எதிர்பார்ப்பதாகவும் தாய்லாந்து வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடம் தாய்லாந்திடமிருந்து 9.4 மில்லியன் தொன் அரிசி ஏற்றுமதி செய்யப்பட்ட போதிலும் 2008இல் 9மில்லியன் தொன் அரிசியினையே ஏற்றுமதி செய்ய எண்ணியுள்ளதாக தாய்லாந்து அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இவ்வருடம் ஜனவரி மற்றும் மே மாதங்களுக்கிடைப்பட்ட காலப்பகுதியில் தாய்லாந்து 4.06 மில்லியன் தொன் அரிசியினை வெளிநாடு களுக்கு ஏற்றுமதி செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது

இலங்கை அரசாங்கம் மியான்மாரிடமிருந்து அரிசியினை இறக்குமதி செய்ய எண்ணியிருந்த போதிலும் சூறாவளியினால்ஏற்பட்டிருக்கும்பாதிப்பின் காரணமாக அது தடைப்பட்டிருப் பதாகவும் தெரிவிக்கப்படுகிறது


மியான்மாரிலிருந்து இலங்கைக்கு அரிசியினை ஏற்றி வரும் 3 கப்பல்கள் அங்கு ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட வில்லை எனவும் அவற்றில் இரண்டு கப்பல்கள் அரிசியினை ஏற்றி வருவதற்கு உடனடியாகத் தயார் நிலையிலிருப்பதாகவும் இலங்கை வர்த்தக அமைச்சின் செயலாளர் ஆர்.எம். கே.ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (அ-5)

## புதிய ஆட்சிக் குழு

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம், கடந்த 4 ஆம் திகதி சங்க பணிமனையில் சங்கத் தலைவர் கப்ரின் டி.ஏ.எம். குணசிங்கம் ஜே.பி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஓர் அங்கமாக நடப்பு வருடத்திற்கான ஆட்சிக் குழு உறுப்பினர் தெரிவு நடைபெற்றது. கீழ்க் காண்போர் ஆட்சிக்குழு உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவராக கப்ரின் டி.ஏ.எம்.குணசிங்கம், ( இவர் இத்துடன் 11ஆவது தடவையாக இச் சங்கத்தின் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும்) கௌரவ செயலாளர் சி.சுரேஸ், பொருளாளராக அருந்தன்,உபசெயலாளர் எஸ்.கனியூட், உபதலைவர்களாக எஸ்.கிளிபேட் அந்தோனிப்பிள்ளை பி.ஏ, எம்.டி.தம்பிராசா, எஸ். சுரேந்திரன், ஏ.வின்சன் மற்றும் திருஞானசம்பந்தர் ஆகியோரும் மேலும் ஆட்சிக்குழு உறுப்பினர்களாக எம்.கெவின்,கே.ஏ.அரவிந்தன்,ரி. கருணாகரன்,எஸ்.அஜித், கே.நாகேந்திரம் ஆகியோரும் விளையாட்டுத் துறை உத்தியோகஸ்தர்கள் ரி.நித்திலநாயகமும் தெரிவுசெய்யப்பட்டனர். (ஓ-110)




## மஹோற்சவம்

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய மஹோற்சவம் இன்று காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் 17ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு சப்பறத்தில் திருவீதியுலாவும், 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு இரதோற்சவமும், 19ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9மணிக்கு தீர்த்தோற்சவமும், மாலை 4மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறும்.

மேலும் தேர்த்திருவிழா அன்று காலை 11மணிக்கு மாணவர்களுக்கான சமய அறிவுத் தேர்வு இடம்பெறும் அத்துடன் நாளை ஞாயிற்றுக்கிழமை கரவெட்டிக் கல்விக் கோட்ட பாடசாலை மாணவர்களுக்கான மஹோற்சவ கால திருக்குறள் மனன, பண்ணிசைப் போட்டிகள் நடாத்தப்பட்டு, 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வெற்றி பெற்றோருக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (அ-6)

## மாணவர்களுக்கு உணவு வழங்கல்

(அல்வாய்)

பருத்தித்துறை கல்விக் கோட்டத்தில் உள்ள சகல பாடசாலைகளுக்கும் வரும் திங்கட்கிழமை முதல் உலக உணவுத் திட்டத்தின் கீழ் உணவு வழங்கும் செயற்பாட்டுக்கான உணவுப் பொருட்கள் பருத்தித்துறை ப.நோ.கூ. சங்கத்தினால் வழங்கப்படவுள்ளது. பாடசாலை அதிபர்கள் தத்தமக்குரிய பொருட்களை கவனமாகப் பார்வையிட்டு பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, யாழ். மாவட்டத்தில் ஏனைய கோட்டங்களுக்கும் உணவு வழங்கற் கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலக திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார். (ஓ-19)

# யாழ்.உற்பத்தி பொருட்களை "கோப் சிற்றி"யில் விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்

## ப.நோ.கூ.சங்கத் தலைவர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் விற்பனைப் பொருட்களை கோப் சிற்றிகளில் காட்சிப்படுத்தி விற்பனை செய்ய பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் பெ.கனகசபாபதி சம்பந்தப்பட்டோரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, யாழ். மாவட்டத்தின் சமகால நிலையைக் கருத்திற்கொண்டு கூட்டுறவுச் சங்கங்களினால் திறக்கப்பட்டுள்ள கோப் சிற்றி விற்பனை நிலையங்களில் யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் கைப்பணிப் பொருட்களைக் காட்சிப்படுத்தி விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

எமது பிரதேசத்தில் இளம் பெண்களுக்கான சுயதொழில் முயற்சிகள் பலவற்றை கூட்டுறவு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கி வருகின்றன. இந்த பயிற்சி பெற்றவர்களின் ஆக்கங்களும் உற்பத்திகளும் மிகவும் தரமானவையாகவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் உள்ள மக்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கான இந்த முயற்சிக்கு இயலுமான அளவு பங்களிப்பை வழங்க வேண்டியது காலத்தின் தேவையாகவுள்ளது.

எனவே, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இதை உணர்ந்துகொண்டு இவர் களின் உற்பத்திக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்தித்தர முன்வர வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார். (அ-5)



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வலிகாம பிரதேசத்தில் அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நாவுக்கரசர் குருபூசை விழாவில் நாவுக்கரசருடைய திருவுருவப்படம் அறநெறிப் பாடசாலை மாணவர்களால் ஊர்வலமாக எடுத்துவரப் படுவதை படத்தில் காணலாம்.

## Earth -திரைப்படம் பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை மு.ப 9.30 மணிக்கு இடம் பெறவிருந்த தீபா மேத்தாவின் Earth திரைப்படம் வீடியோ படக்காட்சி மின்சார தடை அறிவிக்கப்பட்டதன் காரணமாக பிற்போடப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் 17ஆம் திகதி மு.ப 9.30 மணிக்கு காண்பிக்கப்படவுள்ளதாகவும் யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகு இணைப்பாளர் பேராசிரியர்இரா. சிவசந்திரன் அறிவித்துள்ளார். (அ)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள்

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 7இல் சித்திரபாடமும், தரம் 11 இல் பரத நடனமும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புதிய கலைத்திட்ட மதிப்பீடு தொடர்பான செயலமர்வு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30மணிக்கு நடைபெறவுள்ளது என வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார். (ஓ-19)

## மின்சாரத் தடை

(யாழ்ப்பாணம்)


அவசர திருத்த வேலை காரணமாக இன்று சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை உரும்பிராய், கோண்டாவில் பட்டிணப்பகுதி நீங்கலாக யாழ். மாநகர சபைப் பகுதியில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும்என இலங்கை மின்சாரசபை, பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

வேலைகள்முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-7)

## உயர்தர மாணவர் ஒன்றுகூடல் நிகழ்வு

(அல்வாய்)

வடமராட்சி சிதம்பரக் கல்லூரி உயர்தர மாணவர்களின் ஒன்று கூடல் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 10மணிக்கு அதிபர் சி.மகேந்திரன் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஓ-19)





ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலைக்குத் தேவையான மருந்து வகைகளை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட இணைப்பாளர் சி.அ.உதயன், மாவட்ட வைத்திய அதிகாரி அருணபுண்ணியமூர்த்தியிடம் கையளிப்பதை முதலாவது படத்திலும், கையளிப்பு வைபவத்தில் கலந்துகொண்ட வேலணை முன்னாள் பிரதேசசபைத் தலைவரும் சிரேஷ்ட உறுப்பினருமான ந.க.மோகன், ஊர்காவற்றுறை இணைப்பாளர் ம.காந்தன், விஷேட பிரதிநிதி க.வதிமகன் ஆகியோர் கலந்துரையாடுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## அதிபர் பதவி வெற்றிடம் நிரப்புதல்

வலிகாம வலயத்திற்குட்பட்ட இணுவில் இந்துக் கல்லூரி, மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை, சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தியாசாலை ஆகிய பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளது. இணுவில் இந்துக் கல்லூரிக்கு இலங்கை அதிபர் சேவை வகுப்பு 1, வகுப்பு 2.1 (பட்டதாரியாக இருக்க வேண்டும்)ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 1 வகுப்பு 2.1 (பட்டதாரியாக இருக்கவேண்டும்). வகுப்பு 2.11(பயிற்றப்பட்ட பட்டதாரியாக இருக்க வேண்டும்) சேர்ந்தவர்களிடமிருந்தும் மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலை, சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை ஆகிய இரு பாடசாலைகளிடமிருந்தும் இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2.11 வகுப்பு 111ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு 1 வகுப்பு 2.1 வகுப்பு 2.11ஐச் சேர்ந்தவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மாதிரி விண்ணப்பப் படிவத்தினை வலயக் கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு அதற்கமைய விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தங்கள் விண்ணபங்களை எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன் உரிய முறைப்படி வலயக்கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஓ)

## ஆங்கில வாசிப்பு பாசறை

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியின் வெளிச்ச வீடு பாடசாலை அலகு (light house school unit) கல்லூரி விவேகானந்தா மண்டபத்தில் மு.ப 9மணிமுதல் பி.ப 12.30 மணி வரை மாணவர் களுக்கான ஆங்கில வாசிப்பு பாசறை (English reading camp) ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளது.

யாழ். கல்விக் கோட்டத்துக்குட்பட்ட 10 பாடசாலைகளைச் சேர்ந்த தரம் 6இல் பயிலும் 40 மாணவர்கள் இப்பாசறை மூலம் பயன் பெற உள்ளனர். இப்பாசறையின் மூலம் ஆங்கில மொழியிலே வாசிப்புப் பழக்கத்தை மாணவர்களிடையே சிறப்புறச் செய்யும் நோக்குடன், வாசிப்புடன் தொடர்புடைய போட்டிகள் நடாத்தப்பட்டு வெற்றியாளர்களுக்கு பரசில்களும், பங்குபற்றியோர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட உள்ளது. (ஓ)

## சபாலிங்கம் வெற்றிக்கிண்ணம்

யாழ். இந்துக் கல்லூரி எதிர் கொக்குவில் இந்துக்கல்லூரி அணிகளுக் கிடையேயான இ.சபாலிங்கம் வெற்றிக் கிண்ணத்திற்கான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிறிக்கெட் போட்டி இன்று காலை 8.30 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் மருதலிங்கம் பிரதீபன் கலந்துகொள்கிறார். (ஓ)

## விழிப்புக்குழு மீளமைத்தல்

தும்பளை.J/104 கிராமசேவகர் அலுவலகத்தில் ''விழிப்புக்குழு மீளமைத்தல்'' சம்பந்தமான கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 9மணிக்கு நடைபெறவுள்ளது. J/104கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட விழிப்புக் குழுக்களையும், பொதுமக்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கிராமஅலுவலர் திருமதி எஸ்.தியாகராசா கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ)

## நயினை -நாகபூஷணி அம்மன் திருவிழா முன்னேற்பாட்டுக் கூட்டம்

நயினை - நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா ஜூன் 4ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது பெருந்திருவிழாவிற்கான முன்னேற்பாட்டு கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் மேலதிக அரசாங்க அதிபர் ஆ. சிவசுவாமி தலைமையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் திருவிழாக் காலங்களில் அடியார்களை படகுகளில் கொண்டு செல்லுதல் பற்றியும், அவர்கள் பயணிக்கும் போது அணியும் உயிர் காப்பு அங்கிகள் வழங்குதல் பற்றியும், யாழ்-குறிகாட்டுவான் பஸ் போக்குவரத்து மற்றும் சுகாதாரம், மின்சாரம் மற்றும் நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டன.

இக் கூட்டத்தில் வேலணை பிரதேச சபை செயலாளர் கை. மகேந்திரலிங்கம், ஆலய அறங்காவலர், வடபிராந்திய பஸ் போக்குவரத்து அதிகாரிகள், தொண்டர் நிறுவன தலைவர்கள், பிரதேச செயலர் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-5)

# பசுந்தாட் பசளையாகவும் , விதையாகவும் சணலை உற்பத்தி செய்வோம்

குடாநாட்டு விவசாயிகள் பசிய தாவரங்களையும் இலைகுழைகளையும் மண்ணிற்குள் புதைத்தும் சேர்த்தும் மண்வளத்தினை பேணிவந்தனர். இதன் மூலம் பயிர்ச் செய்கையில் உச்சப்பலனைப் பெற்றார்கள். பூவரசு. வேம்பு, பாவட்டை, பனையோலை, காவிளாய், எருக்கலை போன்றவற்றின் இலைகுழைகள் பசுந்தாட் பசளைகளாக உபயோகிக்கப்பட்டு வந்தது. மேலும் பசுந்தாட்பயிரானசணல் விவசாய நிலங்களால் விதைக்கப்பட்டு 50 விதமான பூக்கள் உருவாகும். பருவத்தில் மண்ணில் புதைக்கப்பட்டு வந்தது. ஆனால் போதியளவு சணல் விதைகளைப் பெற்றுக் கொள்ளமுடியாமல் இருப்பதால் இதன் பாவனை தற்போது குன்றியுள்ளது.இதனை நிவர்த்தி செய்யும் நோக்கில் சணல் விதையுற்பத்தியை மேற்கொண்டு விவசாய நிலங்களில் இதனைப் பசும்தாட் பசளையாக மீள உற்பத்தி செய்து வருவதன் மூலம் மண்வளத்தினைப் பேணிக்கொள்ளலாம்.

மேலும் பண்ணையில் பசுந்தாட்பசளை தரும் தாவரங்களை வேலிப்பயிர்களாக வளர்ப்பதன் மூலமும் தரிசு நிலங்கள், பனங்காணிகள் போன்றவற்றிலும் அப்பயிர்களை வளர்ப்பதன் மூலமும் சேதனப்பசளையின் தேவையை நிவர்த்தி செய்யமுடியும். பசுந்தாட் பசளையை வேறிடங்களில் உற்பத்தி செய்து பயிர் செய்யும் இடத்திற்குக் கொண்டுவந்து இடுவது போல பயிர் செய்யும் நிலத்தில் நேரடியாகவே பசுந்தாட் பயிரை உற்பத்தி செய்து புதைப்பதன்மூலம் இரட்டிப்பு பயனைப் பெற்றுக்கொள்ளலாம். அவரைக் குடும்பப் பயிரான சணலிற்கு வளியிலுள்ள நைதரசனை நிலத்தில் பதிக்கும் ஆற்றல் உண்டு. எனவே ஒரு ஏக்கரிற்கு சணலை பசுந்தாட் பசளையாக உற்பத்தி செய்வதன் மூலம் 3.4 மெ. தொன் பசுந்தாட் பசளையை மண்ணிற்கு வழங்கக்கூடியதாக உள்ளதுடன் மேலதிகமாக இடவேண்டிய நைதரசன் உரப்பசளையின் அளவையும் சுமார் 50%ஆல் குறைக்கலாம்.

பசுந்தாட் பசளைக்கு ஏற்ற பருவத்தில் காணப்படும் சணலினையும், அதனை விவசாயி ஒருவர் அறுவடை செய்து மண்ணினுள் புதைப்பதையும் படத்தில் காணலாம்.





### தரைத்தெரிவும் பண்படுத்தலும்

நல்ல நீர் வடிப்புள்ள மணல் சேர்ந்த இருவாட்டி தரை சிறந்தது. இத் தரையை கட்டியில்லாமல் நன்கு தூர்வையாக்கி நீர்ப்பாசன வசதிக்கேற்ப பாத்தியமைத்து விதைத்தலை மேற்கொள்ளலாம்.

***நடுகைக்காலம்:-*** விதை உற்பத்தியாயின் சிறுபோகத்திற்கு சித்திரை மாதமும் , பசுந்தாட் பசளையாயின் காலபோகத்திற்கு ஆவணி,புரட்டாதி மாதங்களும் உகந்தவையாகும்.

### விதையளவு

விதையுற்பத்திக்கு ஏக்கர் ஒன்றுக்கு 20 கி.கிராம் விதைபோதுமானது. ஒரு சதுர மீற்றருக்கு 5 கிராம் விதை வீதம் விதைத்தலை மேற்கொள்வதால் சிறந்த பலனைப் பெற்றுக் கொள்ள முடியும்.பசுந்தாட் பசளை யாக உற்பத்தி செய்வதாயின் 40 கிலோ கிராம் விதை ஒரு ஏக்கருக்கு போதுமானது.

***நீர்ப்பாசனம்:-*** விதை முளைக்கும் வரை ஒருநாள் இடைவெளியில் இரண்டு நீர்ப்பாசனம் மேற்கொள்ளப்படவேண்டும்.பின் 4-10 நாட்கள் இடைவெளியில் மண்ணின் தன்மை, பயிரின் தேவைக்கேற்ப நீர்ப் பாசனம் செய்யலாம். பசுந்தாட் பசளையாக மண்ணில் புதைப்ப தற்கு 50 வீதப் பூக்கள் காணப்படும் போது நிலமட்டத்துடன் வெட்டி அல்லது வேருடன் பிடிங்கி மண்ணில் புதைக்கலாம். இதற்கு பயிர் முளைத்ததிலிருந்து 40-50 நாட்கள் வரை எடுக்கும்.

***பீடை முகாமைத்துவம்:-*** விதை உற்பத்தியில் காய்துளைப் புழுவின் தாக்கம்



விதைத் தேவைக்காக அறுவடை செய்யப்பட்ட சணல்

உற்பத்தியைக் குறைக்கும். ஆகவே பயிர் பூக்க ஆரம்பிக்கும்போதும் 100% பூக்கள் உருவாகிய பின்பும் அற்றபுறோன் பூச்சி நாசினியில் 13 மில்லி லீற்றரை 10 லீற்றர் நீரில் கலந்து விசுறுவதன் மூலம் வெற்றிகரமாக காய்துளை புழுவை கட்டுப்படுத்துவதற் கூடாக தரமான விதையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

***அறுவடை:-*** 95-105 நாட்களில் பயிரில் உள்ள இலைகள் மஞ்சளாகி உதிர்ந்தும், காய்கள் முதிர்ந்து பொன்மஞ்சள் நிறமாகி காய்ந்தும் காணப்படும். இந்த நிலை அறுவடைக்கு ஏற்ற காலமாகும்.

***விதை பிரித்தெடுப்பு:-*** அறுவடை செய்யப்பட்ட சணல்ப் பயிர்களை படங்கில் அல் லது பாய்களில் காயவிட்டு நன்கு காய்ந்த பின் வெய்யில் நேரத்தில் தடிகளால் அடிப்பதன் மூலமும், பெரியளவில் செய்கை பண்ணும் போது நான்கு சில்லு உழவு இயந்திரத்தினாலும் விதையினைப் பிரித்து எடுக்கலாம்.

***விளைவு:-*** சிறப்பான பராமரிப்பின் கீழ் ஏக்கர் ஒன்றிற்கு 400-500கிலோ சணல் விதையை விளைவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**இ.சௌந்தராஜன்**
பாடவிதா உத்தியோகத்தர்(நெல் & மறுவயற் பயிர்கள்)
பிரதி விவசாயப் பணிப்பாளர்(விரி) அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

# வெற்றியை நெருங்குகிறார் ஒபாமா விலக மறுக்கிறார் ஹிலாரி



அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் தேர்வுக்காகமாநிலம் வரியாக நடந்துவரும் தேர்தலில் பாரக் ஒபாமா வெற்றியை நெருங்கிக் கொண்டிருக்கிறார்.

செவ்வாய்க்கிழமை தேர்தல் நடந்த வடக்கு கரோலினா மாநிலத்தில் 14 சதவீத வாக்குகள் வித்தியாசத்தில் ஹிலாரி கிளின்டனை அவர் தோற்கடித்தார். அதேநாளில், வடக்கு இண்டியானா மாநிலத்தில் நடந்த தேர்தலில் நூலிழையில் ஹிலாரி வெற்றி பெற்றார்.

மாநிலம்வாரியாக இதுவரை நடந்த தேர்தல்களின்படி ஒபாமாவுக்கு ஆதரவாக 1840 பிரதிநிதிகளும் ஹிலாரிக்கு ஆதரவாக 1684 பிரதிநிதிகளும் இருக்கிறார்கள். ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக வேண்டுமெனில் 2025 பிரதிநிதிகளின் ஆதரவைப் பெற்றாக வேண்டும். அந்த வகையில் ஒபாமாவுக்கு இன்னும் 185 பிரதிநிதிகளே தேவைப்படுவதால் அவர் வேட்பாளராவதற்கான வாய்ப்புகள் பிரகாசமாகியிருக்கின்றன.

வடக்கு கரோலினா மாநிலத்தில் அதிக வாக்கு வித்தியாசத்தில் ஹிலாரி தோற்றுப் போயிருப்பதால் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராவதற்கான வாய்ப்பு அவருக்கு மங்கியிருக்கிறது.

28பிரதிநிதிகளைக் கொண்ட வடக்கு வேர்ஜீயா, 52 பிரதிநிதிகளைக் கொண்ட ஒரிகான், 51பிரதிநிதிகளைக் கொண்ட கெண்டக்கி, 55 பிரதிநிதிகளைக் கொண்ட பியூர்டோ ரிகோ, 16 பிரதிநிதிகளைக் கொண்ட மோன்டனா, 15 பிரதிநிதிகளைக் கொண்ட தெற்கு தகோதா ஆகிய மாநிலங்களில் மட்டுமே இன்னும் வேட்பாளர் தேர்தல்கள் நடக்க இருக்கின்றன.

இவை அனைத்திலும் வெற்றிபெற்றால் தான் ஜனநாயகக் கட்சியின் சார்பில் அதிபர் தேர்தலில் போட்டியிடுவதற்குத் தேர்வாக வாய்ப்பிருக்கிறது. எனினும் வடக்கு கரோலினாவில் தோல்வியைத்தழுவியிருப்பதால் தார்மீக அடிப்படையில் ஹிலாரி போட்டியில் இருந்து விலகுவதே சரியாக இருக்கும் என நிபுணர்கள் கூறியிருக்கின்றனர்.



எனினும் இந்தக் கருத்துகளை மறுத்துள்ள ஹிலாரி வர இருக்கும் தேர்தல்களில் முழு வேகத்தில் செயல்படப் போவதாகத் தெரிவித்தார்.

இதுவரை நடந்த தேர்தல்களில் 32 மாநிலங்களில் ஒபாமாவும் 17மாநிலங்களில் ஹிலாரியும் வெற்றி பெற்றிருக்கின்றனர். குடியரசுக் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் யார் என்பது தெரிந்துவிட்ட நிலையில் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராவதற்கு தொடர்ந்து நீடித்துவரும் போட்டியால் அதிபர் தேர்தலில் வெற்றிவாய்ப்பு பாதிக்கக்கூடும் என ஜனநாயகக் கட்சித் தலைவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (அ-5)

# கைதிகளைச் சுட்டுக்கொன்றது மியான்மர் இராணுவம்

(யாங்கூன்)

நர்கீஸ் சூறாவளி மியான்மரை கடுமையாக தாக்கி பெரும் சேதம் ஏற்பட்டுள்ள நிலையில் அங்குள்ள இன்னேன் சிறையில் அடைக்கப்பட்டிருந்த 36 கைதிகளை மியான்மர் இராணுவம் சுட்டுக்கொன்றுள்ளது.

சூறாவளி தாக்கிய தகவல் சிறைக்குள் பரவியதும், கைதிகள் அனைவரும் பாதுகாப்புக்காக, சிறைக் கதவுகளை திறந்த விடுமாறு கோரியுள்ளனர். ஆனால் அதை ஏற்க சிறை அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

இதையடுத்து கைதிகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். கதவுகளை உடைத்துக் கொண்டு வெளியேற முயன்ற சிலர் சிறையின் ஒரு பகுதியில் தீவைத்துள்ளனர். இதனால் சிறையில் பெரும் கலவரம் மூண்டது.

இதையடுத்து வரவழைக்கப்பட்ட இராணுவ வீரர்களும், கலவரத் தடுப்புப் பொலிஸாரும் கைதிகளை கண்மூடித்தனமாக சுட்டுள்ளனர். இதில் 36 கைதிகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். 70க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். (அ-5)

# குடிவரவு தொடர்பாக கடுமையான சட்ட விதிகள் -பிரிட்டன் அறிவிப்பு

பிரித்தானியாவானது ஐரோப்பியர்கள் அல்லாத வேற்று நாட்டவர்கள் தொழில் வாய்ப்பை நாடி உள்ளநாட்டுக்குள் பிரவேசிப் பதற்கான சட்டங்களை கடுமையாக்கியுள்ளது.

பிரித்தானியாவின் பாரிய குடிவரவு கொள்கை தொடர்பான இரண்டாம் கட்ட சட்ட விதிகள் கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டன. இதன் பிரகாரம் ஐரோப்பியர்கள் அல்லாத வெளிநாட்டவர்களுக்கு தொழில் வாய்ப்பை வழங்கும் பிரித்தானிய தொழில் வழங்குனர்கள், அத்தொழில் வெற்றிடங்களிற்கு தேவையான திறமைகள் உள்நாட்டுபிரஜைகள் மற்றும் ஐரோப்பிய தொழிலாளர்களிடம் இல்லையென்பதை நிரூபிக்க வேண்டும் என்பது அவசியமாகும். அதேசமயம், ஐரோப்பியர்கள் அல்லாத வெளிநாட்டவர்கள் விசாக்களுக்காக விண்ணப்பிப்பதற்கு முன் நிரந்தர தொழில் வாய்ப்பொன்றை தம்வசம் வைத்திருப்பதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

மேலும் திறமையுள்ள ஐரோப்பியர் அல்லாத தொழிலாளர்கள் சரளமாக ஆங்கிலத்தில் உரையாடும் ஆற்றலைப் பெற்றிருப்பதுடன் 24ஆயிரம் ஸ்ரேலிங்பவுணுக்கு நிகரான வருமானத்தை தமது சொந்த நாட்டில் பெறக்கூடியதாக இருப்பதும் வேண்டப்படுகிறது.

இந்தக் குடிவரவு தொடர்பான புதிய சட்ட விதிகள் பிரித்தானிய குடிவரவு அமைச்சர் லியாம் பைரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்பைத் தேடும் உள்நாட்டவர்களை பாதுகாக்கவும் திறமையானவர்கள் மட்டுமே பிரித்தானியாவுக்குள் நுழைவதை அனுமதிக்கவுமே இச் சட்டவிதிகள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாக லியாம் பைர்ன் தெரிவித்தார். லியாம் பைர்னின் இந்த அறிவிப்பானது அவுஸ்திரேலியாவில் கடைப்பிடிக்கப்படுவதையொத்த குடிவரவு புள்ளியிடல் திட்டமொன்று பிரித்தானியாவில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்ட இரு மாத கலப்பகுதியில் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி புள்ளியிடல் திட்டமானது இவ்வருட இறுதிக்குள் உலகில் உட்பிரவேசிப்பதற்கு மிகுந்த சிரமமான நாடுகளிலொன்றாக பிரித்தானியாவை மாற்றுவதாக உள்ளதென தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

## உலக தரிசனம்

# ரஷ்யாவின் புதிய பிரதமராக விளாடிமிர் புட்டின் தெரிவு

(மொஸ்கோ)



ரஷ்யாவின் புதிய பிரதமரை தெரிவு செய்வதற்கான பாராளுமன்ற வாக்கெடுப்பு வியாழக்கிழமை இடம்பெற்றது.

இவ் வாக்கெடுப்பின் பிரகாரம் பதவியை விட்டு விலகியுள்ள அந்நாட்டின் ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் பிரதமராவது உறுதியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 7 ஆம் திகதி ரஷ்யாவின் புதிய ஜனாதிபதியாக பதவிப் பொறுப்பேற்ற திமித்றி மெட்வேடேவ் அந் நாட்டின் புதிய பிரதமராக விளாடிமிர் புட்டினை பெயர் குறிப்பிட்டதையடுத்தே, அந்நாட்டு பாராளுமன்ற கீழ் சபையில் இந்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

பாராளுமன்றத்தில் விளாடிமிர் புட்டினின் கட்சி பெரும்பான்மை ஆசனங்களைக் கொண்டுள்ள நிலையில், அவர் பிரதமர் பதவிக்கு தெரிவாவது உறுதியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

# இலங்கை இராணுவத் தளபதியின் பாகிஸ்தான் பயணம் வெற்றி

## கொழும்பு ஊடகம் தகவல்

(கொழும்பு)

பாகிஸ்தானுக்கு பயணம் மேற்கொண்டுள்ள இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா பாகிஸ்தான் அரசுடன் மேற்கொண்டுவரும் பேச்சுக்கள் வெற்றியளித்துள்ளதாக கொழும்பிலிருந்து வெளிவரும் டெய்லி மிரர் ஆங்கில நாளேடு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த நாளேட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இரு நாடுகளுக்கும் இடையிலான படைத்துறை ஒத்துழைப்புக்கள், ஆயுதக் கொள்வனவுகள் தொடர்பான பேச்சுக்களில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இந்தப் பயணத்தின்போது பாகிஸ்தான் அரசு மேலதிக படைத்துறைப் பயிற்சிகளை வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

படைத்துறை கொள்வனவுகள் தொடர்பான பேச்சுக்களும் வெற்றியளித்துள்ளன. பாகிஸ்தான் இராணுவத்தின் கூட்டுப்படைத் தலைமைப் பணிப்பாளர் ஜெனரல் ரறிக் மஜீட், படைத்துறைக்கான பயிற்சி ஒத்துழைப்புகளை வழங்க முன்வந்துள்ளார்.

இதனிடையே, பாகிஸ்தான்ஆயுத நிறுவனங்களுக்குச் சென்றிருந்த சரத் பொன்சேகா, அவற்றினைப் பார்வையிட்டுள்ளதுடன் அந்த நிறுவனத்தின் தலைமை அதிகாரி லெப். ஜெனரல் சயீட் சபாகட் கூசேனை சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினார்.

இந்தப் பயணத்தில் இலங்கை இராணுவத்தின் அதிகாரிகள் பிரிவுப் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் எல்.ஏ.டி.அமரதுங்க, பாகிஸ்தானுக்கான இலங்கைத் தூதரகத்தின் பாதுகாப்புத்துறை ஆலோசகர் குறூப் கப்டன் அஜந்த டி சில்வா, சரத் பொன்சேகாவின் இராணுவ உதவியாளர் லெப்.கேணல் ஆர். விஜயசுந்தர ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

இலங்கை அரசிற்கு இராணுவ உதவிகளை வழங்கிவரும் 3 நாடுகளில் பாகிஸ்தானும் ஒன்று. ஏனைய இரு நாடுகள் இந்தியா, சீனா ஆகும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## வவு.கல்வியியற் கல்லூரி பட்டமளிப்பு விழா

(வவுனியா)

வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரியில் 2004/2006 இற்கான கல்வியாண்டில் கல்வி பயின்று சித்தியடைந்த 229 மாணவ ஆசிரியர்களுக்கான பட்டமளிப்பு விழா 2008 ஒக்டோபர் மாதம் 13ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பட்டமளிப்பு விழா சம்பந்தமான விபரங்களை அறிய விரும்பும் மாணவர்கள் சுய விலாசமிடப்பட்ட ஐந்து ரூபாய் பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 21 X 10 செ.மீ அளவிலான கடித உறையினை அனுப்பி பெற்றுக் கொள்ள முடியும்.

அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் மாணவர் பதிவு இலக்கத்தினை தெளிவாக எழுதி, மேற்படி கடித உறையினை பீடாதிபதி, வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி, பூந்தோட்டம், வவுனியா என்னும் முகவரிக்கு காலதாமதமின்றி அனுப்பி பெற்றுக்கொள்ளுமாறு கல்லூரியின் பீடாதிபதி க.பேர்ணாட் அறிவித்துள்ளார். (அ-7)

## ஏப்ரல் மாதத்தில் மட்டும் 32 பொதுமக்கள் கொலை

(கிளிநொச்சி)

தமிழர் தாயகப் பிரதேசத்தில் படை மற்றும் அதனுடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக்குழுவினரால் கடந்த ஏப்ரல் மாதம் மட்டும் 32 அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 8 பேர் காணாமல் போயுள்ளனர் என்று விடுதலைப் புலிகளின் சமாதான செயலகம் தெரிவித்துள்ளது.

வன்னியில் விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிக்குள் படையினர் நடத்திய வான் குண்டுத்தாக்குதல்கள், எறிகணை வீச்சு மற்றும் கிளைமோர் தாக்குதல்கள் மூலம் 7 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

வடக்கு-கிழக்கு மனித உரிமைகள் செயலகப் பணிப்பாளர் கடந்த ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி தேவாலயத்துக்கு அருகாமைப் பகுதியில் படையினர் நடத்திய கிளைமோர்த் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டார்.

கொழும்பில் காணாமல்போனோர் எண்ணிக்கை இதனில் இணைக்கப்படவில்லை என்றும் விடுதலைப் புலிகளின் சமாதான செயலக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் செ.விநோத்குமார் தலைமையுரை நிகழ்த்துவதையும் மேடையில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி நா.சண்முகலிங்கன், கலாசாலை அதிபர் ஆ.சிறீஸ்கந்தமூர்த்தி மற்றும் சிறப்பு.விருந்தினர் ஞானச்சந்திரமூர்த்தி, ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் செ.குமாரசாமி, கலாநிதி செ.திருநாவுக்கரசு, செல்வி கந்தசாமி ஐயர் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

## தூய ஆவியின் பெருவிழா இன்று திருவிழிப்பு வழிபாடு

கத்தோலிக்க மக்களின் பெந்தக்கோஸ்து விழா நாளை கொண்டாடப்படவுள் ளது.யாழ் மறை மாவட்டத்தில் இவ்விழாவை முன்னிட்டு இன்று மாலை 7 மணிமுதல் அதிகாலை 5 மணிவரை புனித மடுத்தீனார் குருமடத்தில் திருவிழிப்பு ஆராதனைகள் இடம் பெறும்.

இவ்வழிபாட்டிற்கு யாழ்.குடாநாட்டிலிருந்து 3 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பங்குபற்றவுள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது. இதே வேளை இப்பெருவிழாவில் மக்கள் கலந்து கொள்வதற்கு பாதுகாப்பு படையினரின் அனுமதி கிடைத்துள்ளதாக யாழ்.ஆயரின் செயலாளர் வண.பிதா .றொசான் அறிவித்துள்ளார். (ச)

## நாகராசாவின் மறைவுக்கு முன்னாள் ஆணையாளர் இரங்கல்


யாழ்ப்பாண மாநகர சபையின் முன்னாள் முதல்வர் சி.நாகராசா (வயது 76) அமெரிக்காவின் நியூஜேர்சி நகரில் காலமானார்.

இவரின் மறைவுக்கு யாழ்.மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர் சீ.வீ.கே. சிவஞானம் இரங்கல் தெரிவித்துள்ளார். 1931ஆம் ஆண்டு பிறந்த நாகராசா ஒரு தலைசிறந்த சட்டத்தரணி ஆவார். ஒரு இடதுசாரியாக தமது அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்த அவர் தமிழ் இனத்தின் விடிவுக்காக உழைக்கவேண்டும் என்ற கொள்கையுடன் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து செயற்பட்டதுடன் இக் கூட்டணி சார்பாக மாநகர சபை தேர்தலில் போட்டியிட்டு அங்கத்தவராகவும் முதல்வராகவும் யாழ்ப்பாண மக்களுக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றினார் என அவர் வெளியிட்ட இரங்கல் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1995/1996 இடப்பெயர்வுகளின் போதும் யாழ்ப்பாண மண்ணிலே தொடர்ந்து வாழ்ந்த இவர், பின்னர் சூழ்நிலை காரணமாக அமெரிக்காவில் குடியேற வேண்டியேற்பட்டது.

மக்களோடு மக்களாக மிக எளிமையான வாழ்க்கையை நடத்தி இறைபதம் எய்திய இவரது ஆன்மா சாந்தியடைய வேண்டுமென பிரார்த்திப்பதுடன் யாழ்ப்பாண மக்கள் அவரை மறக்கவில்லை என்பதை இந்த அனுதாபச் செய்தி மூலம் வெளிப்படுத்தி நின்று அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்றுள்ளது. (ச)

## யாழ்.முன்னாள் மேயர் நாகராஜா காலமானார்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர மேயராக இருமுறை பொறுப்பு வகித்த சின்னத்தம்பி நாகராஜா (வயது-77) நேற்று முன்தினம் அமெரிக்காவின் நியூஜேர்சி நகரில் காலமானார்.

1931ஆம் ஆண்டு பெப்ரவரி 28ஆம் திகதி பிறந்த சின்னத்தம்பி நாகராசா யாழ்.இந்துக் கல்லூரியில் கல்வி கற்றார். அதன் பின்னர் தமிழ் நாட்டின் சென்னையிலுள்ள சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் மேற்படிப்புக்களை நிறைவு செய்தார். ஆங்கில இலக்கியத்தில் முதுகலைப்பட்டமும் பெற்றார். இலங்கையின் வடக்கு கிழக்கு சட்டத்தரணியாக அவர் பணிபுரிந்தார். இவரது இறுதி நிகழ்வுகள் இன்று 10.5.2008 அமெரிக்காவின் நியூஜேர்சி நகரில் முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (ச)

## மென்பந்து துடுப்பாட்ட கால் இறுதிச் சுற்றுப்போட்டி

தமிழ் புத்தாண்டையொட்டி பருத்தித்துறை இலங்கை வங்கி, பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டு கழகத்தின் அனுசரணையுடன் நடாத்திவரும் மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் இரு காலிறுதி ஆட்டங்கள் இன்றும் நாளையும் நடைபெறுகின்றன.

இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டு கழகத்தை எதிர்த்து தொண்டைமனாறு கழுகுகள் விளையாட்டு கழகம் மோதுகிறது.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டு கழகத்தை எதிர்த்து தும்பளை தம்புறுவளை விளையாட்டுக் கழகம் மோதுகிறது. (ஓ-52)

## வலைபந்தாட்ட சங்க பொதுக் கூட்டம்

யாழ்.மாவட்ட வலைபந்தாட்ட சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது. (ச)

## அமைச்சர்கள் சிபார்சு செய்தோர் தேர்தல் கண்காணிப்புக் குழுவில்

### மு.கா.தலைவர் ஹக்கீம் விசனம்

(கொழும்பு)

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு (பப்ரல்) தேர்தல் கண்காணிப்புக்குழுவில் அமைச்சர்கள் சிபார்சு செய்தோரை ஈடுபடுத்துவதை வன்மையாக கண்டிப்பதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளருமான ரவூவ் ஹக்கீம் அவ்வமைப்பின் தலைவர் கிங்ஸ்லி றொட்ரிக்கோவின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளார்.

இது பற்றி பிரஸ்தாப அமைப்பின் தலைவர் றொட்ரிக்கோவிற்கு எழுத்து மூலம் அறிவித்துள்ள ரவூவ் ஹக்கீம், இதற்கு எடுத்துக்காட்டாக அகதி முகாம்களில் கடமையாற்றும் முகாம் அதிகாரிகளை வன்னி புனர்வாழ்வு, மீள்குடியேற்ற அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் சிபார்சின் பேரில் பப்ரல் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்த தீர்மானிக்கப்பட்டிருப்பதாக மிகவும் நம்பகமாக தெரியவருவதாக குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர்களுக்கு விசுவாசமானவர்களையும் பக்கச்சார்பாக நடந்து கொள்வோரையும் கண்காணிப்பாளர்களாக நியமிப்பது, தேர்தல் மோசடிகள் நடப்பதற்கு இடமளிப்பதோடு, தேர்தல் சுதந்திரமாகவும், நீதியாகவும் நடைபெறுவதற்கும் தடையாக இருக்கும் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கு பலத்த எதிர்ப்பையும்அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

## செயன்முறைப் பரீட்சைகள் திங்கள் முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் கடந்த ஏப்ரல் மாதம் 23,24, 28 மற்றும்30ஆம் திகதிகளில் நடாத்தப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான எழுத்துப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான செயன்முறைப் பரீட்சை நடைபெறவுள்ளதாக யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்கள உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் செயன்முறை பரீட்சைக்கான திகதி வழங்கல் மற்றும் புதிய மோட்டார் சைக்கிள் பதிவுக்கான வாகனப் பரிசோதனை என்பன நாளை மறுதினம் தொடக்கம் நடைபெறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஏப்ரல் மாதம் 23,24 ஆம் திகதிகளில் எழுத்துப்பரீட்சைக்கு தோற்றியவர்களுக்கான செயன்முறைப் பரீட்சை எதிர்வரும் 12ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறும்.

ஏப்ரல் 28ஆம் திகதி தோற்றியோருக்கு 13ஆம் திகதியும் 30ஆம் திகதி தோற்றியோருக்கு 14 ஆம் திகதியும் காலை 10 மணிக்கு நடைபெறும் என மோட்டார் போக்குவரத்து திணைக்கள உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார். (ச)

# யாழ். இந்துக் கல்லூரி -க.பொ.த(சா/த) 2007 பெறுபேறுகள்

## ஒரு பார்வை



வீ.கணேசராஜா
அதிபர்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தேசிய கல்லூரியாகவும், தமிழ் மக்களின் முன்னணிக் கல்வி நிறுவனமாகவும் உள்ளது. நாவலர் பெருமானின் சைவ தமிழ் விழுமியங்களைக் கட்டிக் காத்து வரும் இக் கல்லூரி மிகப் பலமான கணித பாரம்பரியத்தைக் கொண்டு விளங்குகின்றது.

பெரும் எண்ணிக்கையான பொறியியல், பௌதீக விஞ்ஞானப் பட்டதாரிகளை உருவாக்க ஆதாரமாக விளங்கியதுடன் மேலும் பல மருத்துவ, வர்த்தக, கலைப் பட்டதாரிகளையும் குறிப்பாக, பல புவியியலாளர்களையும் ஊருவாக்க நன்கு அத்திவாரமிட்டுள்ளது.

இதனால் இக் கல்லூரியின் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகள் யாவரதும் கவனத்தை ஈர்த்து நிற்கின்றன.

க.பொ.த.(சா/த)-2007 பரீட்சைக்கு இக் கல்லூரியில் இருந்து முதல் தடவையாக 210 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றினர்.

இவர்களுள் 208 பேர் (99.04%) க.பொ.த.(உ/த) வகுப் பில் கற்கத் தகுதி பெற்றுள்ளனர்.

மேலும் 199 (94.76%) பேர் க.பொ.த(உ/தி) விஞ்ஞானப் பிரிவுக்கும், 207பேர் (98.57%) வர்த்தகப் பிரிவுக்கும், 208 பேர் (99.04%) கலைப் பிரிவுக்கும் தகுதி பெற்றுள்ளனர்.

2007 க.பொ.த (உ/த) வகுப்பில் கற்பதற்கு தகுதி காண் நிலை 2006 நிலையிலும் பார்க்க (விஞ்ஞானம்- 3.26%, வர்த்தகம் - 3.40%, கலை -3.74%) 3% ஆல் கூடுத லாக உள்ளது.

பரீட்சைக்குத் தோற்றிய 210பேரில் 9 மாணவர்கள் 10 A சித்தியும், 24பேர் 9 A சித்தியும், 22பேர் 8 A சித்தியும் பெற்றுள்ளனர். 210 பேரும் தலா 10பாடங்கள் படி 2100 பாட அலகுகளுக்குத் தோற்றினர்.

அட்டவணை I இல் பாட அலகுகளில் பெறுபேறுகள் தர அடிப்படையிலும் எண்ணிக்கையிலும் வீதத்திலும் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை I**

| தரம் | எண்ணிக்கை | % |
|---|---|---|
| A | 1123 | 53.48 |
| B | 403 | 19.19 |
| C | 344 | 16.38 |
| S | 191 | 9.09 |
| W | 39 | 1.86 |

இப் பெறுபேறுகளை தொகுத்து நோக்கின் 1123 அலகுகளில் A சித்தி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.




கே.நிருஜன்
தேசிய மட்டத்தில்
2ஆம் இடம்



என்.திருத்தணிகன்
தேசிய மட்டத்தில்
3ஆம் இடம்

A,B,C தரங்கள் பெறப் பட்ட பாட அலகுகளின் எண்ணிக்கை 1870 (89.05%) ஆகும். இதனால் பெபேறுகள் சாதாரண வளையி பண்பைப் பெறாது. ஒரு பக்கச் சாய்வுப் (Skewed) பண்பைப் பெற்றுள்ளது. மீத்திறன் மாணவர் தொகுதியின் பெறுபேற்றுப் பண்பு இதுவாகும்.



2006ஆம் ஆண்டுப் பரீட்சைப் பெறு பேறுகளின் சாய்வுப் பண்பை விட 2007 பெறுபேறுகளின் சாய்வுப் பண்பு உயர்தரங் களைச் சுட்டி நிற்கின்றன.

2006, 2007 பரீட்சைப் பெறுபேறுகள் பாட ரீதியாக அட்டவணை II இல் காட்டப்பட்டுள்ளன.

2007 இல் 12 பாடங்களில் 100% சித்தியும் கணிதத்தில் 99%, சங்கீதத்தில் 98.7%, தமிழ் இலக்கி யத்தில் 97.7%, ஆங்கிலத்தில் 95.7%, வர்த் தகமும் கணக்கியலும் 95.3%, சித்திரத்தில் 89.2%, ஆங் கில இலக்கியத்தில் 78.1%, சித்தியும் பெறப்பட்டுள்ளன.

2006 இல் 9 பாடங்களில் 100% சித்தியும், சங்கீதத்தில் 99.1%, வர்த்தகமும் கணக் கியலும் 98.5%, விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் 97.8%, தமிழ் இலக்கியத்தில் 96.8%, விவசாயத்தில் 95.8%, கணிதத்தில் 96.5%, சித்திரத்தில் 88.1%,ஆங்கிலத்தில் 87.28% சித்தி பெறப்பட்டுள்ளன.

ஆகவே 2007 பெறு பேறு கள் உயர்வாக உள் ளன.

அட்டவணைIII இல் 2006-2007 பெறுபேறுகளும் வேறுபாடுகளும் பாடரீதி யாக காட்டப்பட்டுள்ளன.

சித்திரப் பாடப் பெறுபேறுகள் இரு வருடங் களிலும் குறைவாக உள்ளன. இரு வருடங்களிலும் W தரம் பெற்றோர் 12, 12 ஆக உள்ளன. 2007 இல் 59 மாணவர் கள் S சித்தியும் (53.1%), 31 பேர் C சித்தியும் (27.9%) 5பேர் B சித்தியும் (4.5%), 4 பேர் A சித்தியும் (3.6%) பெற்றுள்ளனர்.

நீண்ட காலமாக, சித்திரப் பாடப் பெறுபேறுகள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் மாத்திரமன்று ஏனைய பாடசாலைகளிலும் குறைவாக உள் ளன.

பாடசாலைகளில் சித்திர ஆசிரியர்கள் போதியளவு இல் லாமல் இருந் ததே இதற்குக் காரணம்.

இக் குறை யைப் போக்க வே பல சவால் களுக்கு முகம் கொடுத்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தில் இராமநா தன் நுண்கலைப் பிரிவில் சித்திரமும் வடி வமைப்பும் என்ற கற்கை நெறி ஆரம் பிக்கப்பட்டு 5 அணியினர் வெளியேறியுள்ளனர்.

அண்மையில் தான் இவர் களில் முதலிரு அணியைச் சேர்ந்தவர் களுள் சிலர் ஆசிரிய நியமனம் பெற்றுள்ளனர்.

இதனால் அடுத்துவரும் ஆண்டுகளில் சித்திரப் பாடப்பெறுபேறுகள் உயர்வாக இருக்கும் என நம்பலாம்.

ஏனைய பாடப் பெறுபேறு களும் மேலும் உயர்வடையும் போக்குக் காணப்படுகின்றது.

"தமிழர் தலைநிமிர் கழகம் இதுவே..." என்பதற்கேற்ப யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கல்வியில் மேலும் உயர்வு காண அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சபை, பழைய மாணவர்கள் சங்கம் இணைந்து செயற்படவேண்டும்.


தெளிவான தூரநோக்கு , பணி, இலக்குகள்,திறமுறைகள், வழிகாட்டு நெறிமுறைகள், பண்புகள் கடைப்பிடிக்கப்பட்டு வருவதால் யாழ்ப்பாண இந்து தொடர்ந்தும் வீறுநடை போடும் எனக் கொள்ளலாம்.



பேராசிரியர்
பொ.பாலசுந்தரம்பிள்ளை(Ph.D.Durham)
முன்னாள் துணைவேந்தர்

**அட்டவணை II**

| பாடம் | 2006 தோற்றியோர் எண்ணிக்கை | A | B | C | S | W | சித்தி % | 2007 தோற்றியோர் எண்ணிக்கை | A | B | C | S | W | சித்தி % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சைவசமயம் | 219 | 156 | 38 | 17 | 08 | - | 100 | 208 | 190 | 12 | 04 | 02 | - | 100 |
| றோமன் கத்தோலிக்கம் | 07 | 05 | 01 | 01 | - | - | 100 | 01 | - | 01 | - | - | - | 100 |
| கிறிஸ்தவம் | 01 | 01 | - | - | - | - | 100 | 01 | - | 01 | - | - | - | 100 |
| தமிழ்மொழியும் இலக்கியமும் | 228 | 123 | 68 | 35 | 02 | - | 100 | 210 | 180 | 26 | 04 | - | - | 100 |
| ஆங்கிலம் | 228 | 64 | 29 | 40 | 66 | 29 | 87.28 | 210 | 82 | 31 | 55 | 33 | 09 | 95.7 |
| விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் | 228 | 74 | 62 | 62 | 25 | 05 | 97.8 | 210 | 74 | 62 | 52 | 22 | - | 100 |
| கணிதம் | 228 | 143 | 39 | 21 | 17 | 08 | 96.5 | 210 | 124 | 38 | 27 | 19 | 02 | 99.0 |
| சமூகக்கல்வியும் வரலாறும் | 228 | 101 | 77 | 40 | 10 | - | 100 | 210 | 153 | 38 | 14 | 05 | - | 100 |
| சித்திரம் | 101 | - | 12 | 34 | 43 | 12 | 88.1 | 111 | 04 | 05 | 31 | 59 | 12 | 89.2 |
| சங்கீதம் | 111 | 57 | 23 | 19 | 11 | 01 | 99.1 | 80 | 37 | 19 | 17 | 06 | 01 | 98.7 |
| ஆங்கில இலக்கியம் | 39 | 04 | 09 | 08 | 08 | 10 | 74.4 | 32 | 04 | 02 | 08 | 11 | 07 | 78.1 |
| தமிழ் இலக்கியம் | 189 | 42 | 65 | 56 | 20 | 06 | 96.8 | 177 | 35 | 64 | 57 | 17 | 04 | 97.7 |
| வரலாறு | 12 | 02 | 03 | 03 | 04 | - | 100 | 07 | 05 | 02 | - | - | - | 100 |
| புவியியல் | 60 | 44 | 06 | 09 | 01 | - | 100 | 12 | 03 | 04 | 04 | 01 | - | 100 |
| அபிவிருத்திக் கற்கை | 37 | 14 | 12 | 08 | 03 | - | 100 | 34 | 27 | 07 | - | - | - | 100 |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | 132 | 108 | 14 | 09 | 01 | - | 100 | 158 | 94 | 43 | 20 | 01 | - | 100 |
| விவசாயம் | 24 | 15 | 04 | 03 | 01 | 01 | 95.8 | - | - | - | - | - | - | - |
| வர்த்தகமும் கணக்கியலும் | 203 | 105 | 36 | 40 | 19 | 03 | 98.5 | 86 | 25 | 18 | 27 | 12 | 04 | 95.3 |
| தகவல் தொழில்நுட்பம் | - | - | - | - | - | - | - | 124 | 71 | 27 | 23 | 03 | - | 100 |
| நாடகமும் அரங்கியலும் | - | - | - | - | - | - | - | 19 | 15 | 03 | 01 | - | - | 100 |




**2006 -2007 பாட ரீதியான பெறுபேறுகளும் வேறுபாடுகளும்**

**அட்டவணை III**

| பாடம் | 2006 (%) | 2007 (%) | வேறுபாடுகள்(%) |
|---|---|---|---|
| சைவசமயம் | 100 | 100 | - |
| றோமன் கத்தோலிக்கம் | 100 | 100 | - |
| கிறிஸ்தவம் | 100 | 100 | - |
| தமிழ்மொழியும் இலக்கியமும் | 100 | 100 | - |
| ஆங்கிலம் | 87.28 | 95.7 | +8.42 |
| விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் | 97.8 | 100 | +2.2 |
| கணிதம் | 96.5 | 99.0 | +2.5 |
| சமூகக்கல்வியும் வரலாறும் | 100 | 100 | - |
| சித்திரம் | 88.1 | 89.2 | +1.1 |
| சங்கீதம் | 99.1 | 98.7 | -0.4 |
| ஆங்கில இலக்கியம் | 74.4 | 78.1 | +3.7 |
| தமிழ் இலக்கியம் | 96.8 | 97.7 | +0.9 |
| புவியியல் | 100 | 100 | - |
| அபிவிருத்திக் கற்கை | 100 | 100 | - |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | 100 | 100 | - |
| விவசாயம் | 95.8 | - | - |
| வர்த்தகமும் கணக்கியலும் | 98.5 | 95.3 | -3.2 |
| நாடகமும் அரங்கியலும் | - | 100 | - |
| தகவல் தொழில்நுட்பம் | - | 100 | - |

# இந்திரா இருந்திருந்தால் தமிழீழம் மலர்ந்திருக்கும் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் தெரிவிப்பு

சர்வதேச நாடுகள் இலங்கைப் பிரச்சினையை அடிப்படையான தேசிய இனப்



பிரச்சினையாக பார்க்கவேண்டும். மாறாக பயங்கரவாத பிரச்சினையாக மட்டுமே பார்க்கிறார்கள். பயங்கரவாதம் என்பதும் தாக்குதல் என்பதும் நியாயம் பெறமுடியாத மக்களின் எதிர்வெளிப்பாடாகத்தான் அமைகின்றன என திராவிடர் இயக்கப் பேரவையின் தலைவர் பேராசிரியர் சுப .வீரபாண்டியன் கொழும்பு நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

பேட்டி விபரம் வருமாறு,

*கேள்வி:-* இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் தாங்கள் எவ்வகையான தீர்வை முன்வைக்கிறீர்கள்?

*பதில்:-* இலங்கை இனப்பிரச்சினை என்பது அங்குவாழும் இரு தேசிய இனங்களுக்கிடையே நடைபெறும் மிக நீண்ட நெடிய போராட்டம். அங்கு தமிழ்மொழி பேசிவரும் மக்கள் ஏறத்தாழ 50 ஆண்டுகளாக பல்வேறு அடக்குமுறைகளுக்கு ஆளாகிவருகிறார்கள். ஒடுக்குமுறைக்கு ஆளாகும் ஒரு தேசிய இனம் தன்னுரிமையை நிலைநாட்டுவதற்காக போராட்டத்தில் ஈடுபட்டு வருவது உலக வரலாற்றில் இயல்பாக இடம்பெறும் ஒரு விடயம். எனவே இந்தப் பிரச்சினைக்குத் தனித் தமிழீழம் என்பதுதான் ஒரு நிரந்தர தீர்வாக இருக்கும்.

இருப்பினும் இதற்கு ஒரு இடைக்காலத் தீர்வாக தன்னுரிமை பெற்ற தமிழீழ அரசு அமைவது ஒருவகையில் உதவி புரிவதாக இருக்கக்கூடும். ஆனாலும் இதற்கான இறுதித் தீர்வை களத்தில் நிற்கும் மக்களும் அதற்குப் போராடிவரும் இயக்கங்களும் தான் தீர்மானிக்கவேண்டும் என்ற கருத்தைக் கொண்டுள்ளேன்.

*கேள்வி:-* இனப்பிரச்சினையில் இந்திய அரசு எவ்வகையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தாங்கள் கருதுகிறீர்கள்?

*பதில்:-* இந்திய அரசு இந்தப்பிரச்சினையில் இதுவரை தலையிடவே இல்லை என்று சொல்லிவிட முடியாது. இடையிடையே தலையிட்டிருக்கிறது. ஆனாலும் தலையிட்டபோதெல்லாம் தவறான கோணங்களில் தான் ஈடுபட்டிருக்கிறதே தவிர தலையிட வேண்டிய நோக்கிலும் போக்கிலும் தலையிடவில்லை. ராஜிவ் காந்தி பிரதமராக இருந்த போது இந்திய அரசு இந்தப் பிரச்சினையில் தலை யிட்டு தானே ஒரு ஒப்பந்தத்தை உருவாக்கி கையெழுத்திட்டு ஒரு குழப்பத்திற்கு வித்திட்டது.

தற்போதுகூட தென்னாசியாவில் இருக்கும் ஒரு வலிமைமிக்க அண்டை நாடு என்ற முறையில் அங்கு இருக்கும் மக்களை ஒடுக்கும் இலங்கை அரசுக்கு எதிராகவும் சிங்கள அரசு மேற்கொள்ளும் பயங்கரவாதத்திற்கு எதிராகவும் செயல்படாமல் அரச பயங்கரவாதத்திற்கு ஆதரவாகத்தான் மீண்டும் மீண்டும் இந்திய அரசு இலங்கை அரசுக்கு ஆயுத உதவி அளித்து வருவதை நாம் காண்கிறோம். இது வேதனை தரும் விடயமாகும். எனவே இந்தப் போக்கை மாற்றிக்கொண்டு சிங்கள அரசை கட்டுப்படுத்தி தமிழ் மக்களின் உரிமையை பெற்றுத் தருகின்ற வழியில் இந்திய அரசு தலையிட வேண்டும் என்பதே என்போன்றோர்களில் கருத்தாகும்.

*கேள்வி:-* விடுதலைகேட்டு போராடிய பாலஸ்தீன தலைவர் யாசீர் அரபாத்தின் இயக்கத்திற்கு அங்கீகாரம் அளித்த இந்திய அரசு ஏறக்குறைய அதேநிலையில் விடுதலை கேட்டு போராடிவரும் பிரபாகரன் தலைமையிலான இயக்கத்தை அங்கீகரித்து மறுத்து தடைசெய்திருப்பது சரியா?

*பதில்:-* இதே வினாவை நாங்கள் தொடர்ந்து பல மேடையிலும் பல நூல்களிலும் பல நூல்கள் மூலமாகவும் எழுப்பி வருகிறோம். உலகம் முழுவதும் போராடுகின்ற விடுதலை இயக்கத்தை ஆதரிக்கின்ற இந்தியா தமிழீழம் கேட்டு போராடும் போராளிகள் மட்டும் பயங்கரவாதிகள் என்று கூறுவது எதனால் என்ற கேள்வி மட்டும் அழுத்தமாக இருக்கிறது. அண்டை நாட்டை பகைத்துக் கொள்ளக் கூடாது என்று சொல்வதும் இலங்கை நாட்டின் இறையாண்மை பாதிக்கப்படக்கூடாது என்று சொல்வதும் பொய்யான காரணங்கள்தான். இலங்கை இந்தியாவுடன் ஒப்பிட்டால் மிகச் சிறிய நாடு. ஆனால் இந்தியா தன்னுடைய மிகப் பெரிய அண்டை நாடான சீனாவை இதே போன்ற ஒரு விடையத்தில் பகைத்துக் கொண்டிருக்கிறது.

1959ஆம் ஆண்டில் திபத்தில் இருந்து தலாய்லாமாவும் அவரது ஆதரவாளர்களும் வந்த போது அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தது. இன்றுவரை இமாச்சல பிரதேசத்தில் உள்ள தர்ம சாலா என்னும் இடத்தில்ஒருபுலம் பெயர்ந்த அரசாங்கத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். திபெத்தியர்கள் அரசாங்கத்தையே நடத்துகிறார்கள்.

ஆனால் தமிழீழ மக்கள் அகதிகளாகக்கூட வாழமுடியவில்லை. இங்கே தமிழீழ போராளிகளுக்கு ஆதரவு அளித்தால் இலங்கையில் இறையாண்மைக்கு பாதிப்பு ஏற்படும் என்று கருதுகின்ற இந்திய அரசு திபெத்தியர்களுக்கு ஆதரவளிப்பதன் மூலம் சீனாவின் இறையாண்மை பாதித்து விடாதா என்று கருதவில்லை.

திபெத்தில் உள்ளவர்கள் தங்களின் தேசிய உணர்வுக்காக போராடுவது நியாயம் என்றால் தமிழீழ மக்கள் தங்களின் வாழ்வு நிலைக்காகப் போராடுவதும் நியாயம் தானே! எனவே இந்தியா ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வொரு மாதிரியாகத்தான் நடந்துகொண்டிருக்கிறது. தொடர்ந்து பல இலட்சம் டொலர்களை அமெரிக்க அரசு தலாய்லாமாவுக்கு வழங்கிக்கொண்டிருக்கிறது.

ஆனால் அமெரிக்காவில் இருக்கும் தமிழீழ மக்கள் நமக்கு உதவி செய்வதுகூட பயங்கரவாதம் என்று சொல்லிவிடுகிறது. இதன் மூலம் இந்தியாவும் மற்ற உலக நாடுகளும் தமிழீழ போராட்டத்தில் தவறான பாரபட்சமான கண்ணோட்டத்தைக் கொண்டிருக்கின்றன. இந்தக் கண்ணோட்டம் மாற்றப்படவேண்டிய ஒன்று.

*கேள்வி:-* இனப்பிரச்சினையில் மறைந்த முன்னால் பிரதமர் இந்திராகாந்தியம்மையார் கையாண்ட அணுகுமுறைக்கும் அதனைத் தொடர்ந்து வந்த மற்றத்தலைவர்கள் கையாண்ட முறைக்கும் எம்மாதிரியான வேறுபாடுகளை காண்கிறீர்கள்?

*பதில்:-* ஒருமலைக்கும் மடுவுக்குமான வேறுபாடு இருக்கிறது என்று நான் சொல்ல வேண்டும். இந்திராகாந்தி அம்மையார் பங்களாதேஷ் பிரச்சினையையும் தமிழீழ பிரச்சினையையும் சரியாகத்தான் கையாண்டார்கள். இருக்கின்ற ஒரு மோசமான அண்மை நாட்டை பகைத்துக்கொள்ளக்கூடாது என்று தவறான வெளியுறவுக் கொள்கையைக் காட்டிலும் ஒரு நல்ல அண்டை நாட்டை உருவாக்க வேண்டும் என்ற சரியான அயல் உறவுக் கொள்கையை கையாண்டார்கள். அவர்கள் இல்லை என்றால் பங்களாதேஷ் உருவாகி இருக்காது. அவர் இருந்திருந்தால் தமிழீழம் உருவாகி இருக்கும். எனவே, அவருடைய அணுகுமுறை சரியாகத்தான் இருந்தது. அவருக்கு பின்னால் வந்த ராஜிவ் காந்தியும் மற்றவர்களும் மிக தவறான போக்கை கையாண்டதால் இந்தப் பிரச்சினை மேலும் மேலும் சிக்கலுக்குள்ளானது.

*கேள்வி:-* சிவநேசன் போன்ற தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலியானது அரச பயங்கரவாத்தினால் தானா?

*பதில்:-* கண்டிப்பாக ஏனென்றால் அவர் கொல்லப்படுவதற்கு சில நாட்களுக்கு முன் பாராளுமன்றத்தில் தமிழீழ மக்களுக்கு ஆதரவாக அழுத்தமாக பேசியிருக்கிறார். நன்கு திட்டமிட்டு இலங்கை அரசின் பாது காப்புக் குட்பட்ட எல்லையைத் தாண்டி வன்னிப் பகுதியை நோக்கி சென்றுகொண்டிருக்கும் போது அவர் படுகொலை செய்யப்படுகிறார். அதாவது எங்கள் பிரதேசத்தில் இந்த படுகொலை நிகழ்வில்லை என்பதை வெளியுலகிற்கு காட்டிக் கொள்வதற்காகத்தான் இந்த ஏற்பாடு.

இது முழுக்க முழுக்க அரச பயங்கரவாதத்தினால் தான் நிகழ்த்தப்பட்டது. ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கே பாதுகாப்பில்லை. ஒருவர் தேவாலயத்திலேயே சுட்டுக்கொல்லப்படுகிறார். மற்றொருவர் தன் தாயகத்திற்கு திரும்பும் வழியில் கண்ணிவெடிக்கு பலியாகிறார். இதையெல்லாம் வைத்து பார்த்தோமானால் அந்த நாட்டில் ஜனநாயகத்திற்கு இடமே இல்லை என்றுதான் தோன்றுகிறது.

*கேள்வி:-* இப்பிரச்சினையில் பல ஆண்டு காலமாக விடுதலைப்புலிகள் ஒரேவிதமான அணுகுமுறையைத்தான் கையாண்டு வருகிறார்கள் என்ற ஒரு கருத்து முன்வைக்கப்படுகிறது. இது குறித்து தங்களின் கருத்து என்ன?

*பதில்:-* ஒரேவிதமான அணுகுமுறையைத்தான் அவர்கள் கையாண்டு வருகிறார்கள் என்று எதை வைத்து சொல்கிறீர்கள் என்பது எனக்கு தெரியவில்லை. இருந்தாலும் 1976ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட அந்த இயக்கம் 1985ஆம் ஆண்டில் திம்புவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைக்கு இணக்கமாகத்தான் வந்திருக்கிறது.

85ஆம் ஆண்டிலேயே பேச்சுவார்த்தைக்கு வந்த அந்த இயக்கம் தன் போக்கை மாற்றிக்கொண்டிருக்கிறது என்பதைத்தான் காட்டுகிறது. அந்த பேச்சுவார்த்தை தோல்வியடைகிறது. இந்திய இலங்கை ஒப்பந்தத்திலும் தமிழ் மக்களுக்கான தன்மை எதுவுமில்லை என்ற அடிப்படையில்தான் மறுப்பு தெரிவிக்கப்படுகிறது. மீண்டும் பிரேமதாசா காலத்திற்குப் பின் ஒரு சமாதானம் ஏற்பட்டது. அந்த சமாதானமும் 1995ஆம் ஆண்டில் சந்திரிகாவால் முறியடிக்கப்படுகிறது.

இத்தனைக்குப் பிறகும் ரணில் விக்கிரமசிங்கவின் காலத்திலும் பல்வேறு சமாதான முயற்சிகளுக்கு இணங்கி வந்தார்கள். நோர்வே நாட்டின் மத்தியஸ்தத்தை ஏற்றுக் கொண்டு பேச்சுவார்த்தைக்கு உடன்பட்டார்கள். ஆனால் நோர்வே நாட்டின் கொடியை எரித்தும், அவர்களுக்கெதிராகப் போராட்டம் செய்து கலவரத்தை உருவாக்கியவர்கள் சிங்கள பௌத்த பிக்குகள்.

அதனால், புலிகள் தனி தமிழீழம் தவிர வேறு எதுவும் தேவையில்லை என்ற நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். இலங்கை கூட்டாட்சிக்குள் தன்னாட்சி உரிமை பெற்ற தமிழீழத்திற்கும் சம்மதம் தெரிவித்திருக்கிறார்கள். இன்னும் தெளிவாக் கூறவேண்டுமானால் 2001ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தன்னிச்சையாகப் போர் நிறுத்தத்தை அறிவித்தவர்கள் புலிகள்.

முதலில் ஒரு மாதம் என்று அறி வித்து விட்டு, அதை மேலும் ஒரு மாத்திற்கு நீடிப்பு செய்தவர்கள். இதைத் தொடர்ந்து தான் 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இன்றைக்கு அந்த போர் நிறுத்த ஒப்பந்தம் முறிந்துவிட்டது என்று அறிவித்திருப்பது இலங்கை அரசுதான். அதாவது. போர் நிறுத்தத்தை தன்னிச்சையாக அறிவித்தவர்கள் புலிகள். ஆனால் போரை தன்னிச்சையாக அறிவித்தது இலங்கை அரசுதான். நிகழ்வுகள் இப்படியிருக்கும்போது அவர்களின் அணுகு முறை எப்படி ஒரேமாதிரியாக இருக்கிறது என்று சொல்ல முடியும். (அ-5)


பாடசாலை அதிபர்களே!

மாணவ மணிகளே!

கிரைண்டர் மில் உரிமையாளர்களே!

நாடுங்கள் ....

- பாடசாலை, பல்கலைக்கழக பாடப்புத்தகங்கள்
- பாடசாலை உபகரணங்கள்
- தர உள்ளீட்டுப் பொருட்கள், மூலதனப் பொருட்கள்
- வாத்தியக் கருவிகள்
- கணனி நூல்கள்
- விளையாட்டுப் பொருட்கள்
- ஆய்வுகூட உபகரணங்கள்
- அலுவலக அலுமாரிகள், புத்தக றாக்கைகள்
- O.H.P. புறொயெக்டர்கள், றோணியோ மெசின்கள்
- மனித உடற்கூறுகளின் கனவுருத் தொகுதிகள்
- கிரைண்டர் வகைகள் மற்றும் கிரைண்டர் உதிரிப்பாகங்கள்

யாவற்றையும் நீங்களே தெரிவு செய்து பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஒரேஇடம்

சமுத்திரா ரேட் லிமிற்றட்

*117, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.*

எமது ஸ்தாபனம் 1969 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து இயங்கி வருவதுடன் அரச திணைக்களங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் போன்றவற்றிற்கு பொருட்களை வழங்கி வருகிறது. தொடர்ந்து பல வருடங்களாக வடக்குக் கிழக்கு மாகாண சபையில் வழங்குநர்களாகப் பதிவுசெய்து வந்ததுடன் இம் முறையும் வடக்கு மாகாண சபையில் வழங்குநர்களாக பதிவுசெய்துள்ளோம் என்பதையும் எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

(C/1095)


# அலுவலர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் ஒரு மாதத்திற்குள் வழங்கப்படவேண்டும்

## மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் அறிவுறுத்தல்

(கொழும்பு)

வடக்கு மாகாண சுகாதார அலுவலர்கள், வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் கடமைபுரியும் ஊழியர்கள் இளைப்பாறிச் செல்லும் போது இளைப்பாறிய திகதியிலிருந்து ஒருமாத காலத்துக்குள் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்கப்படவேண்டும். அதற்கு ஏற்புடையவிதத்தில் சம்மந்தப்பட்டவர்களுடைய சுயவிபரக் கோவைகள் நிறைவு செய்யப்படவேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சுதேச வைத்திய அமைச்சின் செயலாளர் தி.இராசநாயகம் வடக்கு மாகாணத்தின் சுகாதாரத் திணைக்கள தலைவர்களுக்கு சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக வடக்கு மாகாண சுகாதார சுதேச வைத்திய அமைச்சின் செயலாளர் சகல சுகாதார திணைக்கள பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சம்பந்தப்பட்ட அலுவலர்களினதும் ஊழியர்களினதும் சுயவிபரக் கோவையை கையாளும் முகாமைத்துவ உதவியாளர்கள் சேவையில் இருந்து இளைப்பாறவுள்ள ஊழியர்களின் சுயவிபரக் கோவைகளை அவர்கள் இளைப்பாறுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் பரிசீலனை செய்து பூரணப்படுத்திவைக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது(அ-5)

பேசாத பேச்சுக்கு நீ எஜமான். பேசிய வார்த்தை உனக்கு எஜமான்.

-இங்கிலாந்து

வலம்புரி

# முன்னாள் நீதிபதி பகவதியின் கருத்து உண்மையானதா?

விடுதலைப் புலிகள் இணங்கினால், இலங்கை இனவிவகாரத்தில் இந்தியா தலையிடும் என முன்னாள் நீதிபதி பகவதி தெரிவித்துள்ளார்.

பகவதியின் மேற்போந்த கருத்து ஆச்சரியமாகவும், அதிசயமாகவும் உள்ளது. ஏனெனில் இலங்கை, இனவிவகாரத்தில் இந்தியா தலையிட வேண்டும் என்பது விடுதலைப் புலிகளினது உறுதியான நிலைப்பாடாக உள்ளது.

நோர்வேயின் அனுசரணையுடன் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமான பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டபோது அந்த பேச்சுவார்த்தை இந்தியாவில் இடம்பெறவேண்டுமென விடுதலைப் புலிகள் விரும்பினர்.

பேச்சுவார்த்தையில் விடுதலைப்புலிகள் தரப்பில் தலைமை வகித்த அன்ரன் பாலசிங்கத்தின் உடல் நிலையை கருத்தில் கொண்டாவது, அவர் இந்தியாவில் சிகிச்சை பெறவும், பேச்சு வார்த்தையில் பங்கு கொள்ளவும் இந்தியா அனுமதிக்க வேண்டுமென்ற விடுதலைப் புலிகளின் கோரிக்கையை இந்திய மத்திய அரசு முற்று முழுதாக நிராகரித்துவிட்டது.

அரசு-விடுதலைப் புலிகளுக்கான பேச்சுவார்த்தை, இந்தியாவில் நடந்திருக்குமாயின், அதனால் இனப்பிரச்சினைக்கு தீர்வு கிட்டியிருக்கும் என்ற கருத்தும் உண்டு.

நிலைமை இவ்வாறாக இருக்கும் போது, விடுதலைப் புலிகள் இணங்கினால் இலங்கை இன விவகாரத்தில் இந்தியா தலையிடும் என நீதிபதி பகவதி கூறியிருப்பது முரண்பாடான கருத்தாகவே உள்ளது.

அதேநேரம் இலங்கை இன விவகாரத்தில் இந்தியா தலையிட வேண்டுமென தமிழக அரசு கோரிக்கை விடுத்திருந்தது. இது தொடர்பில் கலைஞர் கருணாநிதி, பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு கடிதம் எழுதியதுடன் தமிழக சட்ட சபையிலும் இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா தலையிட வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இவையெல்லாம் நடந்து முடிந்த கையோடு முன்னாள் நீதிபதி பகவதி கூறிய கருத்தில், இலங்கை இனப்பிரச்சினையில் இந்திய மத்திய அரசு தலையிட தயாராக இருந்தாலும் அதற்கு தமிழகத்தில் எந்தளவு தூரம் ஆதரவு இருக்குமென கூறமுடியாது எனக் கூறியுள்ளார்.


இது பொருத்துடையதும் ஏற்புடையதும் அல்ல. எதுவாயினும் பகவதியின் கருத்து இந்திய மத்திய அரசின் நிலைப்பாட்டை எடுத்துக் காட்டுவதாக இருப்பின் அதை சாதகமாக பயன்படுத்த தமிழர் தரப்பு பின்னிற்காது.

# சுகாதார சேவைத்துறை ஊழியர்களின் தொழிற்சங்கப் போராட்டங்களுக்குத் தடை

## நிமல் சிறிபால டி சில்வா அறிவிப்பு

(கொழும்பு)

சுகாதார சேவைகள் துறையினரின்



தொழிற்சங்கப் போராட்டங்களுக்கு எதிர்காலத்தில் தடை விதிக்கப்படும் என்று அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா அறிவித்துள்ளார்.

தாதியர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் தீவிரமாக நடைபெற்று வந்த நிலையில் இரத்தினபுரி மருத்துவமனையில் 3 நோயாளர்கள் உயிரிழந்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா கூறியதாவது,

நோயாளர்கள் மரணத்திற்கு காரணமானவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுப்பது குறித்து சட்டமா அதிபரிடம் கருத்துக் கேட்கப்படும். சுகாதார சேவைகளில் தொழிற்சங்கத் தினரின் இத்தகைய போராட்டத்தை தடைசெய்யக் கூடிய சட்டத்தை எதிர்காலத்தில் நிறைவேற்ற வேண்டும் என்றார் அவர்.

அனைத்து இலங்கை சுகாதார சேவைகளின் தொழிற்சங்கப் பிரதிநிதி சமன் இரத்னபிரிய இதுதொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், மருத்துவர் களுக்கு சாதகமாக சுகாதார அமைச்சு எமது தொழிற்சங்க உரிமையை அடக்க முயற்சித்தால் அனைத்துப் பணியாளர் களும் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றார்.

இரத்தினபுரி மருத்துவமனையில் பணிபுரிந்த தாதியர் ஒருவரை இடமாற்றம் செய்வதைத் தொடர்ந்து தாதியர்களின் வேலைநிறுத்தப் போராட்டம் நடைபெற்றது. இதனிடையே நேற்று முன்தினம் மாலை தாதியர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது. (அ-5)

# ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு மஹிந்த சமரசிங்க விளக்கமளிப்பார்?

## அமைச்சின் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

அடுத்தவாரம் ஜெனீவாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் லூயிஸ் ஆபர் உள்ளிட்ட உயரதிகாரிகளுக்கு இலங்கையின் மனித உரிமை நிலைவரங்கள் குறித்து விளக்கமளிக்கவுள்ளார்.

முன்னணி மனித உரிமை அமைப்புக்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இலங்கையின் மனித உரிமை நிலைவரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவிடம் தமது கருத்துக்களைத் தெரிவிக்கவுள்ளன.

எதிர்வரும்செவ்வாய்க்கிழமைஇலங்கையின் மனித உரிமை நிலைவரங்கள் குறித்து ஆணைக்குழுவின் 47 உறுப்பு நாடுகள் மத்தியில் கருத்து வெளியிட இலங்கைக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளதுஎன மனித உரிமைகள் அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்தக்கூட்டத்தில் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் லூயிஸ்ஆபர் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங் களின் பிரதிநிதிகளும் இலங்கையின் மனித உரிமை நிலைவரம் குறித்து விளக்கமளிக் கவுள்ளனர்.

இதற்கிடையில் இலங்கையில் அதிகரித் திருக்கும் மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்துவதாக வழங்கப்பட்ட உறுதி மொழியை இலங்கை காப்பாற்றத் தவறியி ருப்பதால் இலங்கைக்கு ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்புரிமை நாடுகள் ஆதரவு வழங்கக்கூடாது என சர்வதேச மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் இணைந்து சில தினங்களுக்கு முன்னர் கோரிக்கை விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-5)

# சிறுவர் உரிமை மீறல்களைத் தடுக்க சகல பிரதேச சபைகளிலும் விசேட பிரிவு

## ஆணையாளர் சரத் அபய குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

சிறுவர் உரிமைகள் மீறப்படுவதை தடுப்பதற்கு காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு சகல பிரதேச சபைகளிலும் விசேட பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. சிறுவர் உரிமை மீறல், சிறுவர் துஷ்பிரயோகம் , துன் புறுத்தல்கள் அதிகரித்துள்ளதை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ள தாக சிறுவர் பராமரிப்பு மற்றும் பாது காப்பு திணைக்கள ஆணையாளர் சரத் அபய குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

சிறுவர்களின் உரிமையைப் பேண வேண் டிய தேவை அதிகரித்துள்ளதால் பிரதேச ரீதியாக அலுவலகங்களைத் திறந்து அவற்றின் மூலம் உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தீர்மானித்துள்ளதாக அவர் குறிப் பிட்டு ள் ளார்.

அண்மைக்காலமாகசிறுவர் துஷ்பிரயோகம் . சிறுவர் உரிமை மீறல்கள் போன்றவை அதிகரித்துள்ளதுடன் அவை தொடர்பான முறைப்பாடுகள் பல கிடைத்துள்ளதாகவும் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக பிரதேச செயலக பிரிவுகள் ரீதியாக திணைக்களத்தின் விசேட பிரிவுகளை ஆரம்பித்து சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ள உள்ளதாக சிறுவர் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஆணையாளர் சரத் அபயகுணவர்த்தன தெரிவித்துள்ளார். (அ-7)

# தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

ஓலைச் சுவடிகள் 24

## நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

*மாலைப் பொழுது சாய்வதற்கு ஒரு நாழிகை நேரத்துக்கு முன்பு தீபம் ஏற்றுவது ஏன்?*

மாலையில் விளக்கேற்றுவது மிக அவசியம் என்று அனேகர் ஒப்புக்கொள்வர் என்றாலும் மாலைப் பொழுதடைவதற்கு ஒரு நாழிகை நேரத் திற்கு முன் விளக்கேற்ற வேண்டும் என்று மிகச் சரியாக எடுத்துக் கூறும்போது யாரும் கேள்வி எழுப்ப வாய்ப்புண்டு.

மாலை நேரம் தீபம் கொளுத்த வேண்டும் என்றும் எத்தனை திரிகள் பொருத்தி விளக்கேற்ற வேண்டும் என்றெல்லாம் விதி எழுதிய ஆசாரியர்கள் ஒரு நாழிகைக்கு முன்பு தீபம் பற்ற வைக்க வேண்டும் என்றும் எழுதி வைத்துள்ளனர்.

பொழுது சாயும் முன் தீமையின் சின்னமான மூதேவி வந்து சேரும். .அதனால் அதற்கு ஒரு நாழிகை முன்புவிளக்கேற்ற வேண்டும் என்று கூறப்படுவதாக அனேகர் புரிந்து கொண்டிருக்கின்றனர். அவ்வாறு தீமையை வீட்டினுள் நுழைய அனுமதிக்காமல் நன்மையின் அடையாளமான ஸ்ரீ தேவியை வரவேற்க இயலும்.

இதுவே விசுவாசம் என்றாலும் இதைக் குறித்து நவீன சாஸ்திரம் எவ்வாறு ஒப்புகின்றது என்று பார்ப்போம். விளக்கிலிருந்து ஒளிரும் தீபச்சுடர் நன்மை செய்யும் என்று உறுதி செய்கின்ற கண்டுபிடிப்புகள், ஒரு நாழிகை முன்பு விளக்கேற்ற வேண்டும் என்ற நம்பிக்கையையும் உறுதி செய்கின்றது. மாலைப் பொழுது வரு முன்னே சுற்றுச் சூழலில் விஷ அம்சம் பாதிப்புண்டாக்கும் என்றும் அதனால் ஒரு நாழிகை அதாவது இருப்பத்தி நான்கு நிமிடங்கள் முன்பு விளக்கைப் பற்ற வைத்தால் தீபவளையத்துக்குள் வரும் பிரதேசத்திலிருந்து விஷ அம்சத்தை தூரமாக நிறுத்த இயலும் என்று கண்டுபிடித்துள்ளனர்.

## ஊடகங்களுக்கு இராணு...

அறிக்கையில் இராணுவத்தில் இருந்து தகவல் கொடுப்போர் மீது கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இதில் நேரடியாக ஈடுபடுவோர் மற்றும் நேரடியற்ற முறையில் தகவல் கொடுப்போர் போன்றவர்கள் அடங்குவார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதனிடையே அண்மையில் முகமாலையில் நடைபெற்ற பெரும் சமர் தொடர்பான தகவல்களை பல ஊடகங்கள் வெளியிட்டதைத் தொடர்ந்தே இந்தக் கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட்டதாக இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்ட பாதுகாப்புத்துறை தலைமை அதிகாரி டொனால்ட் பெரேரா இராணுவத்தின் உணர்திறன் மிக்க தகவல்கள் எவ்வாறு ஊடகங்களை சென்றடைகின்றன எனக் கேள்வி எழுப்பியிருந்தார்.

மேலும் இராணுவத்தின் புலனாய்வுத் துறையினரால் தயாரிக்கப்பட்ட அறிக்கை ஒன்று ஊடகத்துறையை எவ்வாறு சென்றடைந்தது எனவும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டிருந்தது.

முன்னரும் பல தடவைகள் ஊடகங்களுக்குத் தகவல்களை வழங்க வேண்டாம் என இராணுவத் தளபதிகளுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(ச-5)

## வரலாறு காணாத பாதுகாப்...

பொலிஸ் நிலையங்களிலிருந்தும் தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அல்லது பொலிஸ் பொறுப்பதிகாரி ஒருவர் வீதம் நியமிக்கப்பட்டுள்ளனர். உப பொலிஸ் பரிசோதகர், சார்ஜன்ட் மற்றும் மூன்று பொலிஸ் கான்ஸ்டபிள்கள் எனத் தலா 5 பொலிஸ் அதிகாரிகள் தேர்தல் வாக்களிப்பு நிலையங்களின் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் மேலதிக பாதுகாப்புக்காகப் பொலிஸாரின் ஆயுதம் தாங்கிய 76 நடமாடும் தொலைத் தொடர்பு வாகனங்கள் மாகாணத்தின் வெவ்வேறு பகுதிகளிலும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

அண்மையில் நடைபெற்ற கிழக்கு உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போது அப் பகுதியின் பாதுகாப்பு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டதுடன் வன்முறைகளற்ற தேர்தல் இடம்பெறுவதற்கான வழிமுறைகளையும் பொலிஸார் கையாண்டனர். அதேபோன்று கிழக்கு மாகாண சபைத் தேர்தலின்போது இவ்வாறானதொரு பாதுகாப்பு நடவடிக்கை ஒன்று கையாளப்பட்டுள்ளதுடன் அதைவிட அதிகமான பாதுகாப்பு நடவடிக்கைகளை பொலிஸார் கையாண்டு வருகின்றனர்.

தேர்தலின்போது வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடுவோர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளுமாறும் உரிய பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள பொலிஸ்அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறலாம் எனச் சந்தேகிக்கப்படும் தேர்தல் வாக்களிப்பு நிலையங்களில் அதிகளவிலான பொலிஸாரை நியமிக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

### பிரிகேடியர் கருத்து

இதேவேளை கிழக்கு மாகாண சபைத் தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 3 ஆயிரத்து 500 இராணுவத்தினர் கிழக்கு மாகாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இவர்கள் கிழக்கு மாகாணத்திலுள்ள இராணுவ முகாம்களில் தங்கியுள்ளதுடன் தேர்தல் நடவடிக்கையின்போது பொலிஸாருக்கு இராணுவத்தினரின் ஒத்துழைப்புத் தேவைப்படும்பட்சத்தில் அவர்களின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவர் என்றும் இராணுவப் பேச்சாளர் மேலும் கூறினார். (ச-5)

## மன்னாரில் நேற்று உக்கிர...

தகவல் மையம் தெரிவித்திருக்கின்றது.

பல மணித்தியால்ங்கள் விடுதலைப்புலிகளுடன் இப் பகுதியில் நடைபெற்ற சண்டைகளில் குறைந்தது 15 விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டதாகவும் இராணுவத் தரப்பில் 2 படையினர் கொல்லப்பட்டு மேலும் 7 பேர் காயமடைந்ததாகவும் அந்த ஊடகத் தகவல் மையம் கூறியிருக்கின்றது.

மன்னார் கட்டுக்கரைக் குளத்துக்கு வடக்கே அடுத்தடுத்து அமைந்துள்ள ஊர்களான ஆலங்குளம் மற்றும் கறுக்காய்க்குளம் பகுதியில் இரு தரப்பினருக்கும் இடம்பெற்ற இந்தச் சண்டைகள் பற்றிய தகவலை விடுதலைப்புலிகளின் படைத்துறைப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் பி.பி.ஸி. தமிழோசையிடம் உறுதிப்படுத்தினார்.

இதேவேளை அடம்பனைக் கைப்பற்றியுள்ளதாக இராணுவம் தெரிவித்த தகவலை இளந்திரையன் மறுத்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் சண்டைகள் இடம்பெற்று வருவதாகவும் இராணுவம் கூறுவதில் எவ்வித உண்மையுமில்லை எனவும் தெரிவித்தார்.

(ச-5)

## இலங்கைக்கு...

குள் உள் நுழைந்ததாக கருணா கைது செய்யப்பட்டார்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் போது, இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷதான் தனக்கு போலிக் கடவுச்சீட்டை வழங்கினார் என்று கருணா ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்.

கடந்த ஜனவரி 25 ஆம் திகதி கருணாவுக்கு 9 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இந் நிலையில் கொழும்பில் நேற்று முன்தினம் இரவு இத்தகைய செய்திகள் பரவியமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## மரண அறிவித்தல்கள்



### சின்னத்தம்பி நாகராஜா

(பிரபல சட்டத்தரணியும், யாழ்.மாநகர சபை முன்னாள் முதல்வரும்)

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் நியூஜேர்சி, அமெரிக்காவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நாகராஜா அவர்கள் 08.05.2008 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு அமெரிக்காவில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி கனகம்மா தம்பதியரின் பாசமிகு மூத்த மகனும், காலஞ்சென்ற சின்னத்துரை பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், இந்திராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நாகேஸ்வரி, நாகபூஷணி (அமெரிக்கா), நாகேந்திரம் (எழுதுமட்டுவாழ்), நாகலிங்கம் (லண்டன்), நாகேஸ்வரன் (வவுனியா), நாகதேவி (பொட்ஸ் சுவானா), நாகபாலன் (லண்டன்), நாகலக்சுமி (நியூசிலாந்து), நாகநாதன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,

வைத்திய கலாநிதி அனுசுயா (அமெரிக்கா), பொறியியலாளர் குருபரன் (அவுஸ்திரேலியா), பௌதிகவியல் கலாநிதி சிவபரன் (அமெரிக்கா), கௌசல்யா (கனடா), பொறியியலாளர் தயாபரன் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயகுமார், லக்ஷ்மி, சுதாமினி, ஆனந்தவேல்முருகன், சிவபாலினி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆர்த்தி, அருண், வாணி, அனிக்கா, விக்னேஷ், அக்ஷயா, அபிலாஷ், ஆரூரன், ஆதித்தன், சுர்தி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10.05.2008) சனிக்கிழமை அமெரிக்கா நியூஜேர்சியில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்,
சி.நாகநாதன் (றஞ்சன்)
271, பலாலி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

அனுசுயா:-0016097167374
சிவபரன் :-0016099191995
தயாபரன் :-0019088290102

(161)

### சின்னத்துரை பத்தகுணசீலன்

(பூங்கனிச்சோலை உரிமையாளர்)

சின்னத்துரை பத்தகுணசீலன் (பூங்கனிச் சோலை உரிமையாளர்) இராமலிங்கம் வீதி, முடமாவடியைச் சேர்ந்த சின்னத்துரை பத்தகுணசீலன் நேற்றிரவு அகால மரணமடைந்தார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இராமலிங்கம் வீதி,
முடமாவடி.
021 222 2976

தகவல்,
மனைவி

(c-1097)

## அம்பாறையில் குண்டுவெடிப்பு...

கிழக்கு மாகாணத் தேர்தல் இன்று நடைபெறவுள்ளதாலும் அதைத் தொடர்ந்து வர்த்தக நிலையங்கள் மூடப்படலாம் என்பதாலும் அதிகமான மக்கள் நேற்று மாலை அம்பாறைச் சந்தையில் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு வந்திருந்தனர்.

இந் நிலையில் மாலை 5.45 மணியளவில் மேற்படி தனியார் உணவு விடுதியின் உட்புறமாக இருந்து பாரிய சத்தத்துடன் குண்டு வெடித்தது. இதில் 13 பேர் உயிரிழந்துள்ளனர். 29 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

குண்டு வெடிப்புச் சத்தத்தைக் கேட்ட மக்கள் கையிலிருந்த பொருள்களை அப்படியே போட்டுவிட்டு நாலாபுறமும் சிதறியோடினர். சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு சில மீற்றர் தொலைவிலுள்ள பொலிஸ் காவலரணில் உள்ள பொலிஸாரும் தேர்தலை முன்னிட்டு நகரின் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்புப் படையினரும் உடனடியாக ஸ்தலத்திற்கு விரைந்து காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

காயமடைந்தவர்கள் அம்பாறை பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இவர்களில் சிலர் உடனடியாக சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் மேலும் சிலரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தகவல் தெரிவிக்கையில்,

மாலை 5.45 மணியளவில் அம்பாறை பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சிட்டி கபே என்கின்ற உணவகத்திற்குள்ளிருந்தே குண்டு வெடித்துள்ளது.

இச் சம்பவத்தில் இது வரை 8 பேர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன் சுமார் 15 பேர் காயமடைந்துள்ளனர். காய மடைந்தவர்கள் மற்றும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்றார்.

### அமைச்சர் பேரியல் இலக்கு வைக்கப்பட்டாரா?

இதேவேளை குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெறுவதற்கு ஒரு சில நிமிடங்களுக்கு முன்னரே அமைச்சர் பேரியல் அஷ்ரப் அம்பாறை நகரைக் கடந்து சென்றுள்ளார். இருந்தபோதும் அவர் அம்பாறை சுற்றுவட்டப் பகுதியூடாகச் செல்லாமல் கச்சேரி வீதியூடாகச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அம்பாறையிலுள்ள தங்கு விடுதியில் தங்கியிருந்த அமைச்சர் பேரியல் அஷ்ரப் அல்லது வேறு யாராவது ஒரு முக்கிய பிரமுகரை இலக்கு வைத்தே இக் குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் குண்டுவெடிப்புச் சம்பவத்தினையடுத்து அம்பாறை நகர் உட்பட மாவட்டத்தின் அனைத்துப் பிரதேசங்களிலும் பாதுகாப்பு உஷார் படுத்தப்பட்டது.

அம்பாறை பஸ்தரிப்பு நிலையம். அம்பாறை பிரதான சந்தை ஆகியவற்றில் முப்படையினரும் இணைந்து தேடுதல் நடத்தினர்.

(ச-5)

### ஈர விழிகளுடன்
### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

10.05.2008

அன்னை மடியில்
05
10
1936



ஆண்டவன் அடியில்
23
04
2007

### தம்பிஐயா ஆறுமுகம் (பாலு)

(முன்னாள் ரெலிக்கொம் தொழில்நுட்பஉத்தியோகத்தர்)

ஈரவிழி நெஞ்சுடனே
எம் தலைவா உனை நினைந்தோம்!
பாசப் பறவையைப் போல்
பைஞ் சிறகால் எமை அணைத்து
ஆசைக் கதை பேசி
அன்புடனே அரவணைத்தீர்!
பேணி வளர்த்த நீர்
பேசாமல் போய்விட்டீர்!
யாரை அணுகி எங்கள்
உளக் குமுறல் எடுத்துரைப்போம்?

6, இராஜ வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

என்றும் நின் நினைவுடன்
குடும்பத்தினர்

(c-1096)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.2, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.05.2008இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.